பக்கங்கள்: 17

விலை: 30.00

# தீம்புனல்
THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:32 04.12.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052

தமிழர் தரப்பிடம் ஒற்றுமையும் இல்லை
ஒருங்கிணைவும் இல்லை



கருணாகரன்
பக்கம்
11



மீண்டும் தொடங்கிய வெடிப்புகள்:
யார் காரணர்?
செல்வழுகன்
பக்கம்
09



# மக்களின் காணிகளை குறிவைக்கும் இராணுவம்




அநேகன்

மக்களுடைய காணிகளை கையகப்படுத்துவதில் இராணுவத்தரப்பினர் தொடர்ந்தும் அதிதீவிரம் காட்டி வருகின்றனர். இராணுவத்தினர் தமக்கு இலாபம் தரக்கூடியது எனக் கருதும் காணிகளைக் கையகப்படுத்துவது யுத்தம் ஆரம்பித்த காலத்தில் இருந்து இன்றுவரை நடைமுறையில் இருந்து வருகின்ற விடயமாகும். அண்மைக் காலங்களாக மக்களின் காணிகளைக் கையகப்படுத்தும் நோக்குடன் இராணுவத்தரப்பினர் மேலும் தீவிரம் காட்டி வருவதனை அவதானிக்க முடிகின்றது. காணிகளைக் கையகப்படுத்துவதற்காக காணி உரிமையாளர்களுக்குத் தெரியாமல் திருட்டுத்தனமாக அளப்பதற்குரிய நடவடிக்கைகளை இராணுவத்தினர் முன்னெடுத்து வருகின்ற செயற்பாடுகளை மக்களை அறிந்து கொள்ளும் மக்களும் அரசியல் தலைவர்களும் களத்துக்கு வருகை தந்து அதனை முறியடிப்பதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த செய்திகளும் ஊடகங்களில் தீயாய் பரவிவந்திருந்த செய்திகளாகும். கடந்த மூன்று நான்கு மாதங்களுக்கு முன்னர் கேப்பாப்புலவு இராணுவ முகாமிற்கு அண்மையில் உள்ள பொது மக்களின் காணிகளை இராணுவத்தினர் தங்களது தேவையின் பொருட்டு கையகப்படுத்தும் நோக்கத்துடன் அளக்க முற்பட்டிருந்தனர். அதனை அறிந்த பொதுமக்களும் அரசியல் தலைமைகளும் ஆர்ப்பாட்டம் செய்தது தடுத்திருந்தனர். அதே போன்ற ஒரு செயற்பாடே கடந்த செவ்வாய்க் கிழமையும் மாதகல் பகுதியில் நடந்தேறியள்ளது. கடற்படையினர் பொதுமக்களுக்குச் சொந்தமான காணியினைக் கையகப்படுத்தும் நோக்கத்துடன் அளப்பதற்குரிய நடவடிக்கையினை முன்னெடுத்ததனைத் தொடர்ந்து பொதுமக்களும் அரசியல் தலைவர்களும் எதிர்ப்புத் தெரிவித்து அவர்களுடைய கையப்படுத்தல் செயற்பாட்டினைத் தற்காலிகமாக முறியடித்துள்ளனர்.

▶14

ஐ.வி.மகாசேனன்

# அமெரிக்காவின் ஜனநாயகத்திற்கான உரையாடல் உலக அதிகாரத்தை தக்கவைக்க உதவுமா?

பனிப்போருக்கு பின்னர் மூன்று தசாப்தங்களாக அமெரிக்காவால் பேணப்பட்டு வந்த ஒற்றை மைய அரசியலின் முடி கொரோனா பெருந் தொற்றின் அரசியல் தாக்கங்களுக்கு பின் தளம்பல்களை எதிர்கொண்டு வருகிறது. அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவுடன் வர்த்தகப் போரை நிகழ்த்திய சீனா, பைடனின் ஆட்சிக்காலத்தில் அமெரிக்காவின் உலக அதிகாரத்திற்கு எதிராக நேரடியாக சவால் விடும் நிலைக்கு பரிணாமம் அடைந்துள்ளது. இந்நிலையில் அமெரிக்காவின் உலக அதிகாரத்தை தக்கவைப்பதற்கு அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகம் தொடர்ச்சியாக வேறுபட்ட புதிய இராஜதந்திர பொறிமுறைகளைப் பரீட்சித்து வருகின்றது. அவ்வாறானதொரு பரீட்சார்த்த இராஜதந்திர முயற்சியாகவே ஜனநாயக நாடுகளுக்கான மாநாட்டு அழைப்பும் அமைகிறது. எனினும் இம்முயற்சி அமெரிக்காவின் வல்லரசு அரசியலிலும், சர்வதேச வெளியிலும் எதிர்மறையான விமர்சனங்களை எதிர்கொள்ள ஆரம்பித்துள்ளது. இக்கட்டுரையும் அமெரிக்காவின் ஜனநாயகத்திற்கான மகாநாடு தொடர்பில் முன்வைக்கப்படும் விமர்சனங்களை தேடுவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 9-10 ஆம் திகதிகளில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகம் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளின் அழைப்புடன் ஜனநாயகத்திற்கான உச்சிமாநாடு ஒன்றை மெய்நிகர் வழியில் ஒழுங்கமைத்துள்ளனர். இம்மாநாடு 'ஜனநாயகம் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் வாய்ப்புகள் மீது கவனம் செலுத்தும். மற்றும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தனிநபர் மற்றும் கூட்டு அர்ப்பணிப்புகள், சீர்திருத்த முன்முயற்சிகள் ஆகிய இரண்டையும் தலைவர்களுக்கு அறிவிக்க ஒரு தளத்தை வழங்கும்' என்று பைடன் நிர்வாகம் தெரிவித்துள்ளது. மறுதலையாய் உலக அரசியல் செயற்பாடுகளிலும் ஜனநாயகம் பற்றிய விழிப்புணர்வு சமகாலத்தில் அவசியப்படுவதாகவே அரசியல் ஆய்வாளர்களாலும் சுட்டிக் காட்டப்படுகிறது. சமகாலத்தில் ஜனநாயகம் கடுமையான சவாலுக்குட்பட்டே பயணிக்கிறது. உலகளாவிய கண்காணிப்பு அமைப்பான ஃப்ரீடம் ஹவுஸ் (Freedom House) உலக சுதந்திர நிலை குறித்த இந்த ஆண்டு அறிக்கையை 'முற்றுகையின் கீழ் ஜனநாயகம்' என்று குறிப்பிட்டுள்ளது. உலகளாவிய சமநிலை சர்வாதிகாரத்திற்கு ஆதரவாக மாறியுள்ளதெனப்பதிவு செய்கிறது. குறிப்பாக, பனிப்போரில் அழிந்து போன நினைவுச்சின்னங்கள் என்று ஒரு காலத்தில் கருதப்பட்ட இராணுவப் புரட்சிகள் பல இந்த ஆண்டு மியான்மர், சூடான் மற்றும் கினியா போன்ற நாடுகளில் ஆட்சிக்கவிழ்ப்புகளுடன் மீண்டும் வலுக்கின்றன.



ஜனநாயகம் அழிவுப்பாதையில் செல்லும் சூழலில் ஜனநாயகம்சார் விழிப்புநிலை காலத்தின் தேவையாகவே அமைகிறது. எனினும் தற்போதைய குழப்பகரமான உலக ஒழுங்கில் அமெரிக்க ஜனநாயகத்தை முதன்மைப்படுத்தி மகாநாட்டை ஒழுங்கமைப்பது இதய சுத்தியுடன் ஜனநாயக பாதுகாப்பை உறுதி செய்யுமா என்ற விமர்சனம் பொதுவெளியில் எழுந்துள்ளது. அதற்கான காரணங்களை அவதானித்தல் அவசியமாகிறது.

ஒன்று, அமெரிக்கா நீண்ட காலமாக தனது உலக அதிகாரத்தை உறுதிப்படுத்த தனக்கு இசைவாக ஜனநாயகத்தை கையாண்டு வந்துள்ளது. பனிப்போர் மற்றும் பனிப்போருக்கு பின்னரான காலப்பகுதிகளிலும் அமெரிக்கா தனது அதிகாரத்தை நிலைநாட்ட அதிகம் ஜனநாயகம் என்பதையே முன்னிறுத்தி செயற்பட்டு வந்துள்ளது. அதாவது தனது எதிர் நாடுகளை வீழ்த்துவதற்கும் தனிமைப்படுத்துவதற்கும் அதிகம் ஜனநாயகத்தையே ஆயுதமாக கொண்டிருந்தது. மாறாக தனது பங்காளி நாடுகள் ஜனநாயகத்தை மறுதலிக்கின்ற போதிலும் அவர்களை ஆதரித்து செயற்பட்டு வந்தனர். இந்நிலையிலேயே, தற்போது குழப்பமடைந்துள்ள உலக ஒழுங்கில் அமெரிக்காவின் அதிகாரத்தை தக்கவைப்பதற்கு சீனா மறுதலிக்கும் ஜனநாயகத்தை கொண்டு அமெரிக்கா பலமான கூட்டொன்றை உருவாக்கும் வியூகத்தில் களமிறங்கியுள்ளது என்ற அவதானிப்பும் அரசியல் வெளியில் காணப்படுகிறது. ஜனநாயக ஆட்சியற்ற சவுதி அரேபியா போன்ற தனது பங்காளி நாடுகளுக்கு அழைப்பு விட்டிருக்கவில்லை என்பது முன்னேற்றகரமாக அமைகின்ற போதிலும் இஸ்ரேலை அழைத்துள்ளமை அதன் ஜனநாயக மறுதலிப்பு செயற்பாடுகளுக்கு எதிராக அமெரிக்கா இதுவரை எவ்வித விமர்சனங்களையும்



வெளிப்படுத்தியதில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். எனவே அமெரிக்கா தனது பங்காளிகளின் ஜனநாயக மறுதலிப்புக்களை தொடர்ச்சியாக ஏற்றுக்கொண்டே வருகிறது. இந்நிலையில் ஜனநாயகம் சார்ந்த விழிப்புணர்வை எவ்வகையில் அமெரிக்கா வழிநடத்தும் என்பது எதிர்மறை விமர்சன பார்வையாகவே காணப்படுகிறது.

இரண்டு, உலக ஒழுங்கில் ஆதிக்கம் செலுத்தும் சக்திகளின் கூட்டிணைவினூடாகவே உலக அரசியலில் ஜனநாயகம் போன்ற சித்தாந்தங்களை பாதுகாக்க முடியும். ஒரு சக்தி மாத்திரம் தனது அதிகாரத்தைப் பலப்படுத்துவதற்கான உத்தியாக ஜனநாயத்தை பயன்படுத்த முற்படுமாயின் மறுசக்தி நிச்சமாக ஜனநாயகத்திற்கு எதிரான சர்வதிகாரத்தை பலப்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ளும். அமெரிக்கா ஒழுங்கமைத்துள்ள ஜனநாயக உச்சி மகாநாட்டில் தைவானிற்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பு சீனாவின் விரோதத்தை அதிகரிக்கும் செயலாகவே காணப்படுகிறது. சீனா தொடர்ச்சியாக தைவானை தனது நிலப்பரப்பாகவே பிரகடனப்படுத்தி வருகிறது. அத்துடன் அண்மைய நாட்களில் தென்சீனக்கடலின் தைவான் நீரிணையில் சீனாவின் கடற்படை பிரசன்ன அதிகரிப்பும், அதற்கு எதிராக தைவான் சார்பான அமெரிக்காவின் கருத்துக்களும் சர்வதேச அரசியல் பரப்பில் பெரும் போருக்கான முன்னாயத்தங்களை வெளிப்படுத்தியது. இத்தகைய கொதிநிலையிலேயே நவம்பர்-16 அமெரிக்கள ஜனாதிபதி ஜோ பிடனுக்கும், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கிற்குமிடையே முதல்முறையாக மெய்நிகர்வழியே சந்திப்பு இடம்பெற்றது. குறித்த சந்திப்பில் தைவான் விவாகரமே முதன்மை நிலை பெற்றிருந்தது. எனினும் ஜின்பிங் கடுமையான எச்சரிக்கை தொனியில் அவ்விடயத்தை கையாண்டிருந்தார். அதாவது, 'தைவான் சுதந்திரம் தொடர்பில் பிரிவினைவாத சக்திகள் எங்களைத் தூண்டினால், எங்களை வற்புறுத்தினால் அல்லது சிவப்புக் கோட்டைத் தாண்டினால் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர எங்களுக்கு வேறுவழியில்லை' என்று கூறினார். இந்நிலையில் குறுகிய கால இடைவெளியில் சீனாவின் அறிவிப்புக்கு நேர்மாறாய் தைவானை தனியொரு அரசாக கையாண்டு ஜனநாயக மாநாட்டுக்கு அமெரிக்கா அழைப்பு விட்டுள்ளமை சீனா-அமெரிக்கா போட்டியையும் சீனாவின் கோபத்தையும் அதிகரிக்கும் செயலாகவே காணப்படுகிறது. இது வெளிப்படையாக ஜனநாயக மகாநாடு சீனாவின் அதிகாரப்போட்டிக்கு எதிரானது என்பதையே வெளிப்படுத்தி நிற்கிறது. எனவே அதிகாரப்போட்டியுடன் ஒருங்கிணைத்து ஜனநாயக பாதுகாப்பு என்பது சாத்தியமற்றதாகவே காணப்படுகிறது.

மூன்று, சர்வதேச அரசியல் பார்வையில் விமர்சனங்களை தாண்டி, அமெரிக்க மாநிலங்களில் ஜனநாயகத்தைப் பேண முடியாத சூழலில் சர்வதேச பரப்பில் ஜனநாயகத்தைப் பேண அமெரிக்காவிற்கு இருக்கும் தகுதிகள் தொடர்பில் கேள்வி எழுப்பப்படுகிறது. மார்ச் மாதத்தில், ஜோ பைடன் ஜனாதிபதியாக பதவியேற்ற சிறிது காலத்திற்குப் பிறகு, ஜனநாயக கண்காணிப்புக் குழுவான ஃப்ரீடம் ஹவுஸ் மேற்கொண்ட ஆய்வில் சிலி, கோஸ்டாரிகா மற்றும் ஸ்லோவாக்கியாவில் உள்ள ஜனநாயகத்தை விட அமெரிக்காவின் ஜனநாயக நிலையை மிகவும் கீழே தரவரிசைப்படுத்தியது. அதற்கு காரணங்களாக, ஒரு கட்சி அல்லது வர்க்கத்திற்கு சாதகமான தேர்தல் தொகுதிகள் அரசியலில் பணத்தின் செல்வாக்கு மற்றும் நிற வேறுபாட்டின் அடிப்படையில் உரிமை மறுப்பு ஆகியன தெரிவிக்கப்பட்டிருந்தன. மேலும் அவ்வாய்வு முடிவுகள் தொடர்பில் கருத்துரைத்த ஜனநாயகக் கண்காணிப்புக் குழுவின் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுக்கான துணைத் தலைவரான சாரா ரெபுசி "ஜனாதிபதியை மாற்றுவதால் இந்த சிக்கல் போகப்போவதில்லை" என்றும் தெரிவித்திருந்தார். எனவே ஜனநாயக புறக்கணிப்பு அமெரிக்க அரசியல் இயந்திரத்தில் உறைந்துள்ளதாகவே காணப்படுகிறது.

பைடன் பதவியேற்ற சில மாதங்களிலும் கூட அமெரிக்க ஜனநாயகத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் கணிசமாக மங்கிவிட்டன. குடிமக்கள் வாக்களிப்பதை மிகவும் கடினமாக்கும் முப்பத்து மூன்று சட்டங்களை பத்தொன்பது மாநிலங்கள் இயற்றியுள்ளன. பல மாநிலங்கள் கட்சி சார்பற்ற தேர்தல் நிர்வாகிகளைப் பாகுபாடற்ற சித்தாந்தங்களுடன் மாற்றியுள்ளன. வட கரோலினா மற்றும் டெக்சாஸ் போன்ற ஜனநாயகக் கட்சியினரை நோக்கி நகரத் தொடங்கிய மாநிலங்களில் உள்ள குடியரசுக் கட்சி சட்டமன்றங்கள், குடியரசுக் கட்சியினருக்கு ஆதரவாக தேர்தல் வரைபடங்களை மறுவடிவமைத்து நிறவேறுபாட்டு உரிமைகள் திறம்பட மறுக்கப்பட்டு விட்டன. உள்ளூர் அரசியலில் இந்த இருண்ட பின்னணியில், பைடன் நிர்வாகம் டிசம்பர் தொடக்கத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து அழைப்பாளர்களுடன் ஜனநாயகத்திற்கான மெய்நிகர் உச்சிமகாநாட்டை நடத்துகின்றமை அரசியல் ஆய்வாளர்கள் மத்தியில் அதிகளில் விமர்சனத்தை உருவாக்குகிறது.

எனவே, பைடன் நிர்வாகத்தின் ஜனநாயகத்திற்கான மகாநாட்டு அழைப்பு முற்று முழுதாக சர்வதேச அரசியலில் மாறிவரும் உலக ஒழுங்கை தக்கவைப்பதற்கான கூட்டு உருவாக்க ஏற்பாடாகவே அமைகின்றது. ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க இராணுவம் வெளியேற்றம் மற்றும் ஆக்கஸ் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் ஐரோப்பிய ஒன்றிய புறக்கணிப்பு என்பன அமெரிக்காவுடனான கூட்டு தொடர்பில் உலக நாடுகளுக்கு சந்தேகங்களை உருவாக்கி உள்ளது. இந்நிலையில் பனிப்போர் மற்றும் பனிப்போருக்கு பின்னான ஒற்றை மைய உலக ஒழுங்கு காலப்பகுதியில் கொமன்வெல்த் நாடுகளின் மீது தனது ஆக்கிரமிப்புக்களை உறுதிப்படுத்திக்கொள்ள பயன்படுத்திய ஜனநாயக சித்தாந்தத்தை ஜனநாயகம் காலாவதியாகி செல்லும் சூழலில் மீள அமெரிக்கா மென்அதிகாரமாக பயன்படுத்த முயற்சிக்கிறது. எனினும் இதன் வெற்றி என்பதும் கேள்விக்குரியதாகவே காணப்படுகிறது. சீனாவின் மென்அதிகாரம் என்பது நாடுகளின் உள்ளக விடயங்களில் நேரடி தலையீடற்ற அபிவிருத்தி செயற்பாடு என்ற அடிப்படையிலேயே அதன் வெற்றி சாத்தியமாகியது. எனினும் அமெரிக்கா மென் அதிகார பாணியிலும் சித்தாந்தங்களூடாக நாடுகளின் உள்ளக விடயங்களில் நேரடியாக தலையிட முயல்வது அமெரிக்காவின் மாறாக்கொள்கையே வெளிப்படுத்துகிறது. ■

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL
தீம்புனல்

# நாடும் அல்லோலகல்லோலம் வீடும் அல்லோலகல்லோலம்

கொஞ்சக்காலமாக நாடு பத்தியெரிந்து கொண்டிருந்தது. இப்போது வீடு பத்தியெரியத் தொடங்கியிருக்கின்றது. இது இலங்கைக்குப் போதாத காலம். தொடர்ச்சியாக இலங்கை மக்கள் பிரச்சினைகளையே சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். கொரோனா ஒரு பக்கம் என்றால், விலைவாசி ஒருபக்கம், இன்னொரு பக்கம் பொருட்களை நாட்டில் காணக்கிடைக்கவில்லை. இப்படியான நிலையில்த்தான் நீண்ட நாட்களாக எரிவாயுவை மக்கள் தேடித் திரிந்தார்கள். சிலர் பயணம் போகும் போதொல்லாம் எரிவாயு சிலிண்டரைக்காவிக் கொண்டே சென்றார்கள். எங்காவது எரிவாயு கிடைத்தால் வாங்கிவிடலாம் என்பதே அவர்களின் அப்போதைய எண்ணம். ஆனால் இப்போது அவர்கள் எரிவாயு சிலிண்டரைக் கண்டு அஞ்சியோடுகிறார்கள் அவர்கள் எல்லோரும். ஒரு நண்பர் சொன்னார் ‘தான் தேடாத இடமெல்லாம் தேடி போகாத இடமெல்லாம் போய் சிலிண்டர் வாங்கி வந்ததாகவும் இப்போது ஏண்டா அதை வாங்கினேன்’ என்று இருப்பதாகவும். அப்படி ஆயிற்று எமது மக்களின் நிலைமை. இந் நிலைமைக்குக் காரணம் நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள வீடுகளில் எரிவாயு சிலிண்டர்களும் அடுப்புக்களும் வெடிக்கத் தொடங்கி இருப்பதே.

வீட்டில் மிகவும் சுதந்திரமாக, அடுக்களைக்குள் இருந்த பெண்கள் இப்போது அடுப்படிக்குப் போகவே அச்சப்படுகின்ற நிலைமையாகிப் போயிருக்கிறது எமது நாட்டின் நிலைமை. எரிவாயு சிலிண்டர் எடுத்துத் தந்தால்தான் வீட்டில் அடுப்பெரிப்போம் எனச் சொன்னவர்கள் இப்போது எரிவாயுவைக் கண்டாலே அலறிஅடித்து ஓடுகின்றார்கள். எனவே இன்னொரு நண்பர் சொன்னார் ‘தனது மனைவி புதிதாக வாங்கிய சிலிண்டரை எங்காவது கொண்டுபோய் எறிந்து விட்டு வருவதாகச் சொன்னதாகச் சொன்னார்.’ இப்படியான நிலையில் நிம்மதியில்லாமல் வீடுகள் அல்லோலகல்லோலப் பட்டுக் கிடக்கின்றன. முதலாளிகள் எப்போதும் இலாபத்தையே அடிப்படையாகக் கொண்டு செயற்படுபவர்கள்தான். அதற்காக மக்களின் பாதுகாப்பினைத் துளியேனும் கருத்தில் கொள்ளாமல் இருப்பது முறையல்ல. இதுவரையில் இவ்வாறான அசம்பாவிதம் நடைபெற்றதற்கு பொறுப்புக் கூறும் நிலையில் குறித்த நிறுவனங்கள் இல்லாமல் இருப்பது மிகவும் வேதனை தரும் விடயமாகவே இருக்கின்றது. அரசாங்கம் இத்தகைய அசம்பாவிதங்களுக்கு என்ன காரணம் என்று ஆராய்வதற்கு ஒரு குழுவை முன்னிறுத்தியதோடு சரி, எரிவாயு சிலிண்டர்களை மீளப் பெறுவது தொடர்பில் எந்தத் தீர்மானமும் சரியான வகையில் முன்வைக்கப்படவில்லை. இதில் எரிவாயு கம்பனி உரிமையாளர்கள் தமக்கு ஏற்படும் நட்டத்தினை மட்டுமே கணக்குப் பார்த்துச் செயற்படக் கூடும். ஆனால் மக்களின் பாதுகாப்பையும் அவர்களின் உயிர் முக்கியத்துவத்தினையும் கணக்கிலெடுப்பதே மிக அவசியமனது என்பதனை சம்மந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அரசுக்குப் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றன. அத்தகைய நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நிலையில் எரிவாயு சிலிண்டர் விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கின்றது. நாட்டின் எப்பகுதியில் எத்தகைய அசம்பாவிதம் நிகழ்ந்தாலும் அதற்கான பொறுப்புக் கூறலை அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் சாதாரண சாமானிய மக்களின் எண்ணம். அது தவறானதும் இல்லை. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பலதரப்பட்டவர்கள் தமக்கு இலாபம் வருகின்றது என்பதற்காக முன்னெடுக்கும் செயற்பாடுகளால் பாதிக்கப்படுவது சாதாரண மக்களேதான். இது கடந்த காலத்து அரசியல் வரலாற்றில் இருந்து மக்கள் பெற்றுக் கொண்ட பாடம். அதனையேதான் இப்போதைய விவகாரங்களிலும் பொருத்திப் பார்க்கின்றனர். மக்கள் இந்நிலையில்தான் எரிவாயு சிலிண்டர் விவகாரத்தினைத் திசை திருப்ப சக்ராணின் குண்டுவெடிப்பு விவகாரத்துடன் பொருத்திப் பார்க்க முனைகிறது இன்னொரு தரப்பு. ஆனால் எரிவாயுவின் சேர்க்கையில் ஏற்பட்ட தவறு அல்லது குறைபாடே இத்தகைய வெடிப்புக்குக் காரணம் என்று பலதரப்பட்டவர்களும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். ஆனாலும் அதற்குரிய வாய்ப்புக்களே அதிகம். ஆனால் இன்னும் சரியான நிரூபணம் இல்லை என்பதே, குறித்த உரித்தாளிகளின் தப்பித்தலுக்கான வாய்ப்பாக இருக்கின்றது. குறித்த ஒரு சம்பவத்துக்கான அடிப்படைக் காரணத்தினைக் கண்டடைதல் வேண்டும் என்பது ஒரு பக்கம் இருக்க எரிவாயு வெடித்து மரணங்கள் நிகழும் கொடூரத்தினைத் தடுத்தே ஆக வேண்டும். அதற்கான பொறிமுறையினையே இப்போது கண்டடைவது காலத்தின் தேவையாக உள்ளது. அதற்கு மக்களிடம் சென்று இதுவரை சேர்ந்த எரிவாயு சிலிண்டர்களை மீளப் பெற்றுக் கொள்வது தொடர்பில் சிந்தித்துச் செயற்பட வேண்டும். எரிவாயுவினை மக்களிடம் சேர்ப்பிக்கும் முகவர்கள் மூலம் மக்களிடமிருந்து சிலிண்டர்களைப் பெற்று அதனைப் பாதுகாப்பான முறையில் அகற்ற வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் தொடர்ந்தும் சிலிண்டர்கள் வெடித்து பாரிய அசம்பாவிதங்களை ஏற்படுத்திவிடும் என்பது வெளிப்படையான செய்தி. மக்களும் அவ்வாறான அசம்பாவிதம் நிகழாத வண்ணம் பாதுகாப்பாகச் செயற்பட வேண்டும். தங்களைப் பாதுகாப்பதிலும் கவனமாக இருத்தல் வேண்டும். மக்களும் எத்தனை பிரச்சினையைத்தான் எதிர்கொள்வது? எத்தனை பிரச்சினைகளிலிருந்து தப்பிப்பிழைக்க வழிதடுவது?. ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு பொதிலும் ஒவ்வொரு பிரச்சினை வந்து மக்களின் வாழ்வினையும் உளவியலையும் சிதைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. கொரோனா, விலைவாசி, பஞ்சம் எனத் தொடர்ந்து இப்போது சிலிண்டர் வடிவில் காலைச் சுற்றுகிறது பிரச்சினையெனும் பாம்பு. ■

# அரசினதும் மக்களினதும் பொறுப்பற்ற செயற்பாடு ஒமிக்ரோனை மடியில் இருத்தப்போகிறது

தந்திரன்

மக்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் வைரசுகளின் வீரியம் கூடிக்கொண்டே இருக்கிறது. வைரசு சிலவேளைகளில் உரு மாறியும், சிலவேளைகளில் திரிபடைந்தும் சிலவேளைகளில் உறங்கு நிலையென பல வடிவங்களை எடுத்துக் கொள்வதுடன் மக்களுக்குப் பாரிய அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டுதானிருக்கின்றன.

இன்று தென்னாபிரிக்காவில் தோற்றம் பெற்று உலகை அச்சுறுத்த காத்திருக்கும் ஒமிக்ரோன் வைரசும் இவ்வகையானதே. “ஒமிக்ரோன்” கோவிட் தொற்றின் பாதிப்பு, அதன் ஆரம்ப கட்டமான தற்போதைய நிலையில் டெல்டா ஏற்படுத்திய பாதிப்பை விடக் குறைவாகத் தான் உள்ளது. இருந்தாலும் எதிர்வரும் காலங்களில் அதன் வீரிய அதிகரிப்பு எத்தகைய பாதிப்பினை ஏற்படுத்தப்போகின்றது என்று ஊகிக்க முடியவில்லை. இவ் வைரஸ் தொடர்பில் கருத்து வெளியிட்ட தென்னாப்பிரிக்க மருத்துவ சங்கத்தின் தலைவர் ஏஞ்சலிக் கோட்ஸி போகப் போகத்தான் அதன் பாதிப்பு தொடர்பில் அறிந்து கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளார்.




ஒமிக்ரோனின் அறிகுறிகளைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் உடல் நிலை சோர்வாக இருப்பதோடு உடல்வலி, கடுமையான தலைவலி மற்றும் சோர்வு நிலை என்பன காணப்படுவதாக அறிந்து கொள்ள முடிகின்றது. எனினும் டெல்டா தொற்றின் பின் ஏற்படும் வாசனையின்மை, சுவை இழப்பு, அல்லது கடுமையான காய்ச்சல் போன்ற அறிகுறிகள் ஒமிக்ரோன் தொற்றின் பின்னர் இருக்குமா? என்பது தொடர்பில் சரியான தகவல்கள் இல்லை.

கோவிட் வைரஸின் ஒமிக்ரோன் மாறுபாடு இலங்கைக்குள் நுழைந்தால் மரபணு பகுப்பாய்வு மூலம் கண்டறிய ஆய்வக வசதிகள் இருப்பதாக நிபுணர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்ற போதும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான அல்லது இல்லாதொழிப்பதற்கான மருத்துவ வசதிகள், மருத்துவக் கட்டமைப்புக்கள் இருக்கின்றதா? என்பது தொடர்பில் அறிய முடியவில்லை. இது தொடர்பில் மருத்துவ நிபுணர்கள், சுகாதாரத் தரப்பினர் எவரும் கருத்துத் தெரிவிக்கவில்லை.

“இதுவரை இருந்த மற்ற நான்கு கோவிட் தொற்றின் பரவுகையைவிடவும் ஒமிக்ரோன் மிக வேகமாக பரவக் கூடிய தன்மைகொண்டது. அதேபோல தொற்றேற்பட்ட நபருக்கு மீண்டும் மீண்டும் இத் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக மருத்துவத் துறையினரால் அச்சுறுத்தப்படுகின்றது.

அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் ஒமிக்ரோன் மாறுபாட்டின் நடத்தை பற்றிய தெளிவான தகவல்களை பெற முடியும். உலகெங்கிலும் உள்ள 24 நாடுகளில் ஒமிக்ரோன் மாறுபாடு கண்டறியப்பட்டுள்ளது. இந்நிலையில், உலகளாவிய சுகாதாரத் துறைகள் இது குறித்து சிறப்பு கவனம் செலுத்தியுள்ளது.

ஆனால் முன்னர் யுத்தத்தினை தோற்கடித்தது போல் கடந்த கொரோனாவையும் வென்றோம் என தம்பட்டம் அடித்தடித்து உயிரிழப்புக்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டிருக்கிறது எமது நாட்டு அரச தலைமைகள்.

புதிய கோவிட் மாறுபாட்டைக் கட்டுப்படுத்த மக்களின் ஆதரவு மிகவும் அவசியமானது என்றும், சரியான சுகாதார பரிந்துரைகளைப் பின்பற்றுவது மற்றும் இந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பது அனைவரின் பொறுப்பாகும் எனவும் அரசு சார்பானவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இங்கே வேடிக்கை என்னவென்றால் கட்டுநாயக்கா விமான நிலையம் திறந்து விடப்பட்டிருக்கிறது. எண்ணுக்கணக்கான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படாமல் நடமாட விடப்படுகின்றார்கள். இது தொற்றினை மேலும் செறிவடையச் செய்வதற்குரிய முக்கியமான காரணி என்பதனை இது வரையில் அரசு உணரவில்லை. சுகாதார வழிமுறைகளைப் பேணுங்கள் என மக்களுக்கு அறிவுரை கூறும் அரசாங்கம் தமது வருமான இழப்பினை விரும்பாதநிலையில் வெளிநாட்டுப் பயணிகளின் வருகைக்கு அனுமதியளித்து நாட்டினை ஆபத்துக்குள் தள்ளிவிட்டிருக்கின்றது.

அதிலும் இதுவரை நாட்டுக்குள் வருகை தந்த வெளிநாட்டுப் பயணிகள் PCR பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. அவ்வாறு பரிசோதனைக்கு உட்படுத்தாமலே நாட்டின் பல பகுதிகளிலும் உலவுவதற்கு விடப்பட்டுள்ளார்கள். அண்மையில்தான் சுற்றுலா பயணிகளுக்கும் PCR பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என இலங்கை வைத்திய சங்கம் கோவிட் தடுப்பு குழுவுக்கு யோசனை முன்வைத்துள்ளது. அப்படி என்றால் இதுவரை அத்தகைய பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை என்பது தானே வெளிப்படை. இந்நிலை தொடருமானால் ஒமிக்ரோன் வைரஸ் இலங்கைக்குள் தீவிரமாக பரவுவதனை எவராலும் தடுக்க முடியாது.


அதேவேளை இலங்கை உள்ளக மக்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளும் கவலைக்கிடமானதாகும் போக்குவரத்தின் பொழுதும், பொது மக்கள் கூடுமிடங்களிலும் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வெகுவாக குறைந்து வருகிறது.

எனவே மக்கள் மாத்திரம் அல்ல அரசாங்கமும் கோவிட் காலத்தில் தமக்கென விதிக்கப்பட்ட கடமைகளை பொறுப்புடன் ஆற்றாதுவிடின் மீண்டுமொரு சாக்காட்டின் வேதனையை அனைவரும் அனுபவிப்பதனை எவரும் தடுக்க முடியாது. ■

# சிந்தனையும் அணுகுமுறையும் மாற்றமடைய வேண்டும்.

## -உலக வரலாறு கற்றுத் தந்த பாடம்-

செல்வின்



வரலாற்றின் நிகழ்வுகளிலிருந்து கற்றுக்கொள்ளத் தவறும்போது வரலாறு எங்களை தவறிப் போன மக்கள் கூட்டமாகவே பதிவுசெய்யும். இவ்வுலகின் அரசியல் சமூகப் பொருளாதார வரலாறுகள் தரும் பாடங்களை மிகவும் ஆழமாகவும் விமர்சனக் கண்ணோட்டத்துடனும் பார்த்து அதிலிருந்து கற்றுக்கொள்ளத் தவறும் சமூகம் மீண்டும் மீண்டும் வீழ்ச்சியையும் அடிமைத்தனத்தையுமே தனது மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும்.

ஒடுக்குமுறைக்கும் அடிமைத்தனத்திற்கும் இலக்கான சமூகத்தின் மீது போர்வெற்றிபெற்றதாக மார்தட்டும் ஒடுக்குமுறையாளன் தொடர்ச்சியாகத் தனது ஒடுக்குமுறையினை மாற்று வடிவங்களில் முன்னெடுத்துக் கொண்டே இருப்பான்.

விடுதலையினை விரும்புகின்ற சமூகம்தான் தன்னை ஒடுக்குகின்ற சக்திகளின் ஒடுக்குமுறைத் தந்திரோபாயங்களை முறியடித்து வெற்றிகொள்ள மாற்றுத் தந்திரோபாயங்களையும் புதிய போராட்டக்களங்களையும் கண்டறிந்து போராடவேண்டியுள்ளது.

புதிய அரசியல் ஒழுங்கின் கீழ் யுத்தங்களில் தோற்கடிக்கப்பட்ட நாடுகள் தங்களைத் தக்கவைத்து மீண்டெழுந்து ஏனைய நாடுகளுடன் சமானமாகவும் சமாதானமாகவும் வாழுவதற்கு எடுத்த முனைப்புகள் யாவும் சவால் மிக்கதாகவும் புதுமையானதாகவும் அமைந்திருந்தது. அவர்களது முயற்சிக்கும் வெற்றிக்கும் பின்னால் அவர்கள் கொண்டிருந்த தங்கள் பண்பாடு சார் விழுமியங்களே அத்திவாரக் கற்களாக அமைந்திருந்தன.

2 ஆம் உலகமகாயுத்த காலத்தில் யப்பானியப் பேரரசு தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதற்காக நடத்திய போர்களும் செய்த அட்டூழியங்களும் எந்த நிலையிலும் அங்கீகரிக்கப்படமுடியாதவை. உலகப்போரில் அமெரிக்கா அதனை சரணாகதி நிலைக்குக் கொண்டு வந்து வெற்றிகொண்டது. யப்பானின் சரணாகதியின் பின் அமெரிக்கா தனது தளபதிகளில் ஒருவரான டக்ளஸ் மக் ஆர்தர் (Commodore Douglas Mac Arthur) என்பவர் தலைமையில் மீண்டும் யப்பானைக் கட்டியெழுப்பும்

யுத்தத்திற்குப் பின்னரான உடனடிக்காலத்தில் புதிய பாடப்புத்தகங்களை அச்சடித்து வழங்குவதில் உள்ள சவால்கள் பெரிதாக இருந்தமையினால் மாணவர்களிடம் இருந்த புத்தகங்களிலிருந்து தேவையற்ற பக்கங்களும் பத்திகளும் வரிகளும் நீக்குவதற்கான உத்தரவுகள் வழங்கப்பட்டன. மாணவர்கள் ஒவ்வொருவரும் ஆசிரியர்களின் நெறிப்படுத்தலில் தங்கள் புத்தகங்களிலிருந்து தங்கள் கைகளினாலேயே அடையாளங்காணப்பட்ட பக்கங்களையும் பத்திகளையும் வரிகளையும் கறுப்பு மையினால் அடித்து மறைக்கும்படி நிர்ப்பந்திக்கப்

சமூகவாழ்விலும் யப்பானியர் தங்கள் மரபுகளையும் பண்பாட்டு விழுமியங்களையும் மிகவும் இறுக்கமாகப் பின்பற்றினார்கள். வெளிப்புறத்திற்கு அமெரிக்கமயப் படுத்தலுக்கு உட்பட்டாலும் தங்களுக்குள் முழுமையான யப்பானியர்களாகவே தங்களைத் தக்கவைத்துக் கட்டியெழுப்பினார்கள்.

அமரிக்கத் தளபதி டக்ளஸ் மக் ஆர்தர் (Commodore Douglas Mac Arthur) தலைமையில் முன்னெடுக்கப்பட்ட

யப்பானின் புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கும் அப்பால் யப்பானியர்கள் தங்களது எதிர்காலமும் மீளெழுச்சியும் தொடர்பான ஒரு தெளிவான தொலைநோக்கினையும் வேலைத்திட்டத்தையும் முன்னெடுத்தார்கள். தங்கள் நாட்டை மீண்டும் உலகின் முன் நிலைநிறுத்தும்

திட்டத்தை முன்னெடுத்தது.

யப்பானிய மக்களின் பேரரசருக்கு விசுவாசமான அரசியல் பண்பாட்டினை இல்லாதொழித்து மக்களாட்சி சனநாயக அரசியலை அறிமுகப்படுத்துவதன் மூலம்தான் எதிர்காலத்தில் யப்பானின் போரிடும் ஆற்றலை இல்லாமல் செய்யலாம் என்ற நோக்குடன் “சனநாயகப்படுத்தலும் அமெரிக்கமயப்படுத்தலும்” (Democratization and Americanization) என்ற எண்ணக்கரு முன்னெடுக்கப்பட்டது.

கல்வி, நிர்வாகம், திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி, மாற்றத்திற்கான சிந்தனைகள் என்ற பல தளங்களிலும் அமெரிக்காவின் பண்பாட்டுப் பெறுமானங்களே விதைக்கப்பட்டன. எல்லாவிதமான புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி முன்னெடுப்புகள் தொடக்கம், வாழ்வாதார உதவிகள் வரை அனைத்திலும் அமெரிக்க சிந்தனைவாதமும் அணுகுமுறைகளும் அடையாளங்களுமே வெளிப்படையாகவே நிலைநிறுத்தப்பட்டது. பள்ளிப் பாடப்புத்தகங்களில் அதுவரை உள்ளடக்கப்பட்டு வந்த மன்னரையும் அவரின் பாரம்பரிய பெருமைகள் மேல் மக்கள் கொண்டிருந்த பேரன்பும் விசுவாசமும் தொடர்பான வரலாற்று தகவல்கள் யாவும் புத்தகங்களிலிருந்து நீக்கப்பட்டன.



பட்டார்கள். இது ஒருவகையில் மிகவும் கடுமையான உளவியல் சார் தண்டனையாக யப்பானிய சிறார்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அமைந்திருந்தது.

சரணாகதிக்குப் பின்னரான அடுத்த ஐம்பது வருடங்களுக்குப் போரிடும் ஆற்றல்கொண்ட படைத்தொகுதியை உருவாக்க முடியாத அளவுக்குச் சரணாகதி ஒப்பந்தம் யப்பானியர்களைக் கட்டிப்போட்டது. யப்பான் மீண்டும் ஒரு பலம் பொருந்திய நாடாக எழுச்சியடையக் கூடாது என்ற வகையில் சகல முனைப்புகளும் வெற்றியடைந்தோரின் நிகழ்ச்சித்திட்டமாக (Victors Agenda) நிறைவேற்றப்பட்டது.

எனினும் யப்பானியர்களின் மனஉறுதி வரலாற்றின் போக்கை புரட்டிப்போட்டது. ஆயுதபலத்தினாலும் பேரரசரின் விசுவாசத்தின் பேரிலும் மீண்டெழ முடியாத யப்பான் தன்னை ஒரு மிகப்பெரும் பொருளாதார ஆளுமைகொண்ட நாடாக உலகின் முன் நிலை நிறுத்தியது. யப்பான் உலகின் மோட்டார் வாகன உற்பத்திச் சந்தையில் கொண்டிருந்த மேலாதிக்கத்தினால் தன்னிலை இழந்த அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ் 1992 ஆம் ஆண்டில் யப்பானுக்கு விஜயம் செய்து நீங்கள் “யப்பானியராக இருங்கள் தயவுசெய்து அமெரிக்கப் பொருட்களை வாங்குங்கள்” (Be Japanese: Buy Americans) என யப்பானியரைக் கோரவேண்டிய அளவுக்கு யப்பான் தன்னை உலகின் முன் நிலைநிறுத்திக் கொண்டது என்றால் அதற்குப் பின்னால் சில முக்கியமான இரகசியங்கள் இருந்தன.

வெற்றிகொண்ட அமெரிக்காவின் சனநாயகப்படுத்தலும் அமெரிக்கமயப்படுத்தலும் என்ற கோசம் யப்பானிய சமூகத்தினை வெளிப்புறமாக ஆக்கிரமித்திருந்தாலும் தங்கள் வீட்டிலும்

> **1948 இல் ஐ.நா.சாசனத்தின் கீழ் இஸ்ரேல் என்ற நாடும் பாலஸ்தீனம் என்ற நாடும் பிரகடனப்படுத்தபட்டபோது யூதர்களால் ஏற்கெனவே காசு கொடுத்து வாங்கப்பட்ட நிலமும் குடியேற்றப்பட்ட மக்களும் பசுஞ்சோலைகளாக்கப்பட்ட விவசாயப்பண்ணைகளும் தயாராக இருந்தன.**

போராட்டத்திற்கான புதிய களத்தினை பொருளாதார அபிவிருத்தியும் கைத்தொழில்மயமாக்கலும் என்ற புதிய தளத்தில் திறந்தார்கள்.

இங்கு யப்பானியர்களிடமிருந்து நாங்கள் கற்றுக்கொள்ளவேண்டியது.

நாங்கள் எங்களையும் எங்கள் தலைமுறைகளையும் எங்களது பண்பாட்டு விழுமியங்கள் சார்ந்தவர்களாக எவ்வாறு தக்கவைப்பது,

வெற்றிபெற்ற ஆக்கிரமிப்பாளரின் நிகழ்ச்சித்திட்டத்திற்கும் அப்பால் எங்களை மீண்டும் நிலைநிறுத்துவதற்கான தொலைநோக்குடன் கொண்ட வேலைத் திட்டத்தை எவ்வாறு முன்னெடுத்துச்செல்வது,

எங்களால் விரைந்து வெற்றிகொள்ளக்கூடிய புதிய போராட்டக்களங்களை வன்முறைக்கும் வாய்ச்சொல் கோசங்களுக்கும் வல்லரசுகளின் காலவரையறையற்ற வாக்குறுதிகளுக்கும் அப்பால் பொருளாதார முனைகளுக்கு ஊடாக எவ்வாறு திறப்பது என்ற விடயங்களாகும்.

(15 ஆம் பக்கம் பார்க்க...)

# ஊடக அறத்திற்கான அடிப்படைத் தேவை ஊடக விலங்கறிவே...

சந்திரமதி போல்ராஜ்
நான்காம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



மனித வாழ்வில் தகவல் தொடர்பின் பங்கு அளப்பிடற்கரியது. மனிதர்கள் தாம் விழித்திருக்கும் நேரத்தில் சுமார் 80 சதவீதத்தை தகவல் தொடர்பில் செலவிடுகின்றனர் கள். பிறர் சொல்வதைக் கேட்பது பிறருக்கு பதில் சொல்வது போன்ற தொடர்பாடல் செயல்கள் அவர்களின் நேரத்தை ஆக்கிரமிக்கின்றன. தொடர்பாடல் என்பது ஒரு செய்தியை, தகவலை அல்லது கருத்தினை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளும் தொழிற்பாட்டைக் குறித்து நிற்கிறது. தகவலால் ஆளப்படுகின்ற இன்றைய உலகில் தொடர்பாடல் என்பது உணவு, உடை, உறையுள் போன்று மனிதருக்கு இன்றியமையாத ஒரு விடயமாக உருமாறியுள்ளது.

ஜனநாயகத்தின் நான்காவது தூண் என போற்றப்படுவது ஊடகமாகும். ஊடகம் என்ற சொல்லிற்கு ஊடுருவல் அல்லது கடத்துதல் என்றும் நேரடியான அர்த்தம் உண்டு. ஊடகங்கள் மக்களுக்கு சமூகத்தில் இடம்பெறுகின்ற அனைத்து விடயங்களையும் விரைவாக கடத்துகின்ற பணியை செய்கின்றன. ஊடகங்களில் இத்தகைய செயற்பாட்டால் உலகத்தின் வேகத்துடன் தாமும் பயணிக்கின்ற உணர்வு எழுகின்றது.

தகவல் தொடர்பு என்பது செய்திகளையோ, கருத்துக்களையோ ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளும் செயற்பாடாகும். இதில் தகவல் அனுப்புபவரும் பெற்றுக்கொள்பவரும் முக்கியமானவர்கள். இவர்கள் எவ்விதம் முக்கியத்துவம் கொண்டு காணப்படுகின்றனரோ அதைவிட மேலாக தகவலை அனுப்பப்பயன்படும் சாதனம் இன்றியமையாததாக காணப்படுகின்றது.

மனித குலத்தின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் மக்கள் பல்வேறு முறைகளில் தம்மிடையே தகவல்களைப் பரிமாறி வந்துள்ளனர். காலத்திற்கு காலம் தகவல் தொடர்பாடல் சாதனங்களும், தகவல் தொடர்பு உத்திகளும் மாறிக்கொண்டே வந்துள்ளன. மனிதன் சிந்திக்கத் தொடங்கிய காலகட்டத்தில் குறியீடுகள், மரக்கட்டைகள், களிமண் கட்டிகள், உலோகங்கள் எனவும் பின்னாளில் புறாக்கள், தீப்பந்தங்கள், ஒற்றர்கள், தூதுவர்கள் முதலானவர்களும் தொடர்பு சாதனங்களாக பயன்படுத்தப்பட்டனர்.

தகவல் தொடர்பு ஊடகங்களில் ஆரம்பநிலை ஊடகங்களாக அச்சும், தாளும் அறிமுகமாகிய போது தகவல் தொடர்பு ஒரு புதிய வடிவம் தாங்கியது. அதன் காரணமாக "செய்தித்தாள்" என்ற ஊடக கலாசாரம் தோன்றியது. இதன் தொடர்ச்சியாக அச்சு வழி சாதனங்கள் பல தோற்றம் பெற்று அச்சுக்கலை சார் ஊடகங்களாக பரிணமித்தன.



இருபதாம் நூற்றாண்டில் அறிவியலின் இடைவிடாத வேகமான செயற்பாடு தொழிற்புரட்சியின் அடிப்படையில் மின்னியல் தொழில் நுட்பக் கருவிகளை உருவாக்கின. தகவல் தொடர்பாடலிலும் மின்வழி சாதனங்கள் பயன் பாட்டிற்கு வரத்தொடங்கின. அவற்றில் வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் போன்றவை குறிப்பிட்டு சொல்லக் கூடியவை.

மின்னணுவியல் வளர்ச்சி தகவல் தொடர்பாடல் துறையிலும் புதிய உத்திகளைப் புகுத்தியதோடு விரைவாக, நுணுக்கமாகச் செயற்படவும் காரணமாக அமைந்தது. இதன் காரணமாக இணையவழி ஊடகங்களும் சமூக ஊட கங்களும் உருவாகின. இன்று அச்சு இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்களின் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வகையில் நவீன கையடக்கத் தொலை பேசிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான உலகத்தில் இடம்பெறும் செய்திகளை உடனுக்குடன் வழங்கும் சாதனங்களாக ஊடகங்கள் செயல்படுகின்றன.

விரிந்த உலகம் ஒரு கிராமமாக மாறிவிட்டது உலகின் ஒரு கோடியில் நடைபெறும் சம்பவம் அடுத்த கணமே மறு கோடிக்கு தெரியும் அளவிற்கு ஊடக வளர்ச்சி உயர்ந்திருக்கிறது. அந்த வகையில் உலகின் கட்டமைப்பு இன்று ஊடகங்களின் கையில் என்று கூறினால் அது மிகை யாகாது. இத்தனை முக்கியத்துவம் வாய்ந்தாக அமைவதால் இன்று ஊடகத்துறை ஓர் அறிவு கூராகி விரிந்து வேகமாக வளர்ந்து வருகிறது. ஊடகத் துறையின் வளர்ச்சி,எழுச்சி,போக்குகள்,நடைமுறைகள் பற்றி எல்லாம் ஆழமாக சிந்திக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதனடிப்படையில் "இலங்கை வெகுசன ஊடகவியல் பட்டயக்கற்கைகள் நிறுவனம்" எனும் பெயரிலான வெகுசன உயர்கல்வி கற்கைகள் மற்றும் பயிற்சி நிறுவனத்தை தாபித்தல் தொடர்பான நடவடிக்கைகள் அரசாங்கத்தால் மேற் கொள்ளப் பட்டுள்ளது.

வெகு சன ஊடகத் துறை யில் காணப்படும் பிரச்சினை களை இனங் கண்டு உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதி யான கற்கைகளின் தரநிய மங்களுக்கமைய வெகுசன ஊடகக் கல்வி மேம்பாடு மற்றும் உயர் தரநியமங்களைப் பாதுகாப்பதற்காகவும், அரச அனுசரணையுடன் கூடிய நிறுவனமொன்றைத் தாபிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக, பாடசாலைகளில் வெகுசன ஊடகவியல் தொடர்பான பாடவிதானத்தைப் பயில்கின்ற குறிப்பிடத்தக்களவிலான மாணவர்கள் இருக்கின்ற போதிலும், அவர்களுக்கான உயர்ந்த தரநியமங்களுடன் கூடிய போதுமானளவு கற்கை நிறுவனங்கள் இதுவரை ஸ்தாபிக்கப்படவில்லை.

பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்படும் வெகுசன தொடர்பாடல் பட்டப்படிப்புக் கற்கைகள் சில காணப்பட்டாலும், குறித்த கற்கைகள் மூலம் தொழில்வாண்மை ரீதியான ஊடகவியலாளர்களை உருவாக்குவதற்குப் போதியவாறான பிரயோக ரீதியானதும் தொழிநுட்ப ரீதியானதுமான அறிவு வழங்கப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

அதனால், தற்போது வெகுசன ஊடகத்துறையில் பணிபுரியும் ஊடகவியலாளர்களுக்கும், ஊடக முகாமையாளர்களுக்கும் அதேபோல் ஊடகத்துறையில் பிரவேசிப்பதற்கு எதிர்பார்க்கும் பாடசாலை மாணவர்களுக்கும் வெகுசனத் தொடர்பாடல் பாடவிதானத்தைக் கற்பதற்கும், தேவையான பிரயோக ரீதியான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அவர்களுடைய இயலளவு விருத்தியை ஏற்படுத்தி தொழில்வாண்மையை மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கும், விழுமியம்மிக்க சுயகட்டுப்பாட்டுடன் கூடிய ஊடகக் கலாச்சாரத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான ஊடகவியலாளர்களை உருவாக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டு, வெகுசன ஊடகவியல் தொடர்பான சான்றிதழ் பாடநெறி தொடக்கம் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பு வரைக்குமான கற்கை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இயலுமான வகையில் வெகுசன உயர்கல்விக் கற்கைகள் மற்றும் பயிற்சி நிறுவனமாக 'இலங்கை வெகுசன ஊடகவியல் பட்டயக்கற்கைகள் நிறுவனம்' எனும் பெயரிலான நிறுவனமொன்றை தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக பிரஜைகள் ஊடகவியல் வளர்ச்சி அடைந்துள்ளது. அதாவது ஒரு தனி நபர் தமது கருத்துக்களைத் தாமே பதிவு செய்து மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளது. இது தமது சொந்தக் கருத்துக்களை சுதந்திரமாகப் பதிவு செய்து கொள்வதற்கான தளமாக அமைந்தாலும் அந்தச் சுதந்திரத்தை சரியான முறையில் பயன்படுத்த வேண்டிய கடமையை எத்தனை பேர் சரியாகச் செய்கிறார்கள் என்பது கேள்விக்குறியே?

தமது தனிப்பட்ட சுய விருப்பு வெறுப்புகளை ஊடகம் வழியாக வெளிப்படுத்துவது. ஒரு விடயத்தின் உண்மை நிலையை சரியாக ஆராய்ந்து நடுநிலையாக செயற்படக் கூடிய தன்மை குறைவாகவே இன்றைய சமுதாயத்தில் காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் மக்களிடம் காணப்படக்கூடிய ஊடக விலங்கறிவு என்பதாகும். ஊடகத்தை சரியாகப் புரிந்து கொண்டு ஓர் ஊடகவியலாளர் என்ற ரீதியில் தமது ஊடகத்தின் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் திட்டமிட்டு முறையாகச் செயல்பட வேண்டும்.

இதனடிப்படையில் வெகுசன உயர்கல்விக் கற்கைகள் மற்றும் பயிற்சி நிறுவனமாக 'இலங்கை வெகுசன ஊடகவியல் பட்டயக்கற்கைகள் நிறுவனம்' போன்றவற்றை தாபிப்பதன் நடவடிக்கைகள் ஊடாக ஊடகத்துறை சார்ந்த சரியான அறிவினை, கற்கைநெறிகளை இளந் தலைமுறையினருக்கு வழங்கி எதிர்காலத்தில் சிறந்த ஊடகவியலாளர்களை உருவாக்கலாம்.

ஊடகத்துறை சார்ந்த கற்கைகளால் மாத்திரமே சிறந்த ஊடகவியலாளர்களை உருவாக்க முடியும் என்பதல்ல. இன்று சமூகத்தில் நடைபெறும் ஊடக அறத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களுக்கான அடிப்படைக் காரணம் அத்துறை சார்ந்த அறியாமையே, அந்த அறிவினை வழங்கும்போது மக்களுக்கு தேவையானவற்றை அவர்களிடம் கொண்டு சேர்க்கும் தெளிவான நல்ல ஊடகவியலாளர்களை பெறும் வாய்ப்பினையும் எம்மால் பெற்றுக்கொள்ள முடியும். ■

# என்ன உலகமடா பரமானந்தா? 32

தமிழ்க்கவி

மறுபடியும் விடியக்காத்தால மல்லிகைப் பூக்கள் பூத்தமாரி ரோட்டெல்லாம் வெள்ளைச்சட்டையள் நிறம்பி வழியுதடா. ஏதோ புதிசா பள்ளிக்கூடம் போறமாதிரி சின்னாக்கள் சிலித்துக் கொண்டு தாய் தேப்பன்ர மோட்டச் சயிக்கிளுகள்ள போறதப் பாக்க எனக்கு சந்தோசம் ஒருபக்கம் இருந்தாலும், மனசுக்குள்ள சின்னதா பொறாமையாவும் கிடக்கடா.

"சனியும் ஞாயிறும் ஓய்வுநாள். தனிய வீட்டில தங்குநாள்
திங்கக்கிழமை தோன்றிச்சே செல்லுவோம் பள்ளி ஐந்துநாள்"

எண்டு அந்தநாளையில நாங்கள் பாடிக்கொண்டு பள்ளிக்கூடம் போன அந்த நாளைய நெச்சுப்பாப்பன் அப்பெண்டா அவரவர் குலத்தொழில் தானே அவர வருக்குச் சொந்தம். அப்ப எங்கட படிப்பு அஞ்சாம் வேப்பு அதிகமெண்டுதான் சொல்லுவன். "அக்கரையில் தாளங்காய் அங்க கிடந்தா என்ன இஞ்ச கிடந்தா என்ன" எண்டு சொல்லுற மாதிரி கமக்காறன்ர பிள்ளையள் படிச்சாலும் பேந்தும் மண்ணைத்தானே கிண்ட வேணும். உத்தியோகக் காறற்ர பிள்ளையள் தான் பத்தாம் வேப்பு வரைக்கும் படிக்குங்கள். மாறா, சில கடை முதலாளிமாற்ற பிள்ளையளும் கணக்கெழுதப் படிக்குங்கள். நாங்கள் பேய்க்கிலானுகள் மாதிரி காடுவழிய அலைவம்.

இப்ப ஒரு ஏழெட்டு மாசமா பிள்ளையளும் படிக்கிறதெண்டா போனிலதான் கண்டியோ படிப்பு அதுகும் ஏதோ சூ மந்திரக்காளியோ என்னவோ னா... விட்டிராதை பிடி சூம் சூம்தான் அதிலதான்ரா பள்ளிக்கூடம் நடத்தினவங்கள். பள்ளிக்கூடம் மட்டுமே கூட்டங்கள் கொமிட்டியள் எல்லாம் அதிலதான் ஹஹ நல்ல வசதியாப் போச்சுடா... பின்ன சிலது பேர் பேசத் துவங்கினா எழுத்துக்கூட்டி வாசிக்கிறமாதிரி இழுத்துப்பறிச்சு போகும். சிலது பேர் பாத்தியெண்டா நிகழ்ச்சிக் காறருக்கு குழையடிக்கிறதில் நேரத்தைப் போக்காட்டுவினம். எங்கட பக்கத்து வீட்டுப் பிள்ளை எப்பன் என்னோட கதைக்க வெண்டு வந்தாள். ஒருத்தினைக்க பொடியன் அம்மாவக் காணன் எண்டு தேடி வந்திட்டான் நீ சொல்லுறாயடா சில வீட்டுப்பிள்ளையளுக்கு உதொரு பழக்கமடா தாய் எங்கினயும் போனா வீட்டில உள்ளவை எல்லாம் கொடிவிட்டுச் சரியிறது. நாய் முதலா வந்திடும். எப்பன் வந்தவையோட ஆசறுதியாக் கதைக்கப் போறியே.... அது நடவாது.

"அம்மா நாலுமணியாகுது சூம் மீட்டிங் வரட்டாம் அண்ணன்"

'ஓமணை அயத்துப்போனன். பிறகு வரட்டே' எண்டவள் அரக்கப்பறக்க ஓடிற்றாள். பிள்ளையள் விசுவாசமாப் படிக்குதுகள் எண்டெல்லாம் நினைக்காதையுங்கோ. அதுகளுக்கு இப்ப யூரியூப், பேஸ்புக் எல்லாத்திலும் கணக்கிருக்கு. பின்ன சொல்லுறாயடா முந்தாநாள் மழை உந்தக் கொட்டு கொட்டுது மழைக்கு ஒதுங்க வந்த பெடியனுக்கு என்ன வயசோ தெரியா... முளைச்சு மூண்டிலை விடேல்ல. அது என்னைக் கேக்குது 'எணேய் உன்ர பேஸ்புக் ஐடியத் தாவனணை' எண்டு. 'ஏன்ரா அதைக் கொண்டே நீ என்னேயப் போறாய்' எண்டா. படிக்கிற பொடியளுக்கு விலாசமடிப்பானாம். ஒருக்கா சிரிச்சுப் போட்டு கொப்பரக் காணட்டும் குடுத்து விடுறன் எண்டு வெருட்டி அனுப்பினன்.

இப்ப பள்ளிக்கூடத்துக்குப் பிள்ளையள் ஒழுங்காப் போகுதுகள். பழைய நடைமுறையப்போல எங்க 'போன'த் தடை செய்யட்டன் பாப்பம். இனி நடவாது. "சேம்புக்கு புளிவிட்டாக்காதே சிறுவர்க்கினியது காட்டாதே" எண்டு சும்மாவே சொல்லுறது. பிள்ளையள் எல்லாரும் வசதியா இல்லை ஆனாலும் என்ன? கூலிக்குப் போறவனும் பிள்ளைக்கு ஒரு 'டச்' போன் வாங்கிக் குடுத்துத்தான் இருக்கிறான். இனியினி அது மாத்தேலாது. பள்ளிக்கூடங்களில படிக்கிற படிப்பும் அங்க வாங்கிற புள்ளியளும் வாழ்க்கைக்கு உதவுறதில்லை. அதுமட்டுமில்ல பள்ளியில படிக்கிற படிப்புக்கு எந்தவிதத்திலயும் சம்பந்தமில்லாத வேலைய வாழ்க்கை முழுக்க செய்து மாயுறவையும் இருக்கினந்தானே அப்பா அம்மாட விருப்பத்துக்கு பள்ளிக்கூடத்தில கப்பை கொட்டிப்போட்டு, குருடன் பெண்டிலுக்கடிச்ச கணக்கில வாழ்க்கைய அமைச்சுக் கொண்டு வாழுறதுதானேடா இப்ப நடைமுறை.

பங்க வட்டிக்கடை சுந்தரத்தார் மோளை டொக்டருக்கு படிக்க வச்சார். பெடிச்சி ஒரு டாக்குத்தரை லவ்விட்டாள். என்னெயிற பத்துலெச்சம் ரொக்கமும் பதவிசா நகை நட்டும் போட்டுக் கட்டிக் குடுத்திட்டார் கலியாணம் முடிய வேலை வேண்டாம் வீட்டில் இருந்து பிள்ளையளப்பார். வீட்டப்பார் எண்டு சொல்லிப் போட்டானாமடா மாப்பிளை. ஐயோ சுந்தரத்தாருக்கு பெருமை பிடிபடயில்லை போற வாறவைக்கெல்லாம் சொல்லிச் சொல்லி மாயுறாராம். கேள்விப்பட்டு நானும் அந்தப்பக்கமா போகயுக்க லேசா அருட்டினன். 'மெய்யேடா பெடிச்சி எந்த ஆசுப் பத்திரியில வேலை" யெண்டு.


"வேலையோ அவளேன் வேலைக்குப் போறாள். மாப்பிளை வீட்டில வச்செல்லே பாக்கிறார்" எண்டான். "தூ... அவள் அவனப்பாக்கிறாளோ அவர் அவளைப்பாக்கிறாரோ. பேயா கலியாணங்கட்டி பிள்ளைப்பெத்து வளக்க டாக்குத்தருக்கு படிக்க வேணுமே" கேளடா கதைய. வீட்டுக்கொரு வேலைக்காறியப் போட மாட்டாம எவ்வளவு கயிட்டப்பட்டு படிச்சிட்டு. படிச்ச படிப்பை நாட்டுக்குமில்லாம வீட்டுக்கு மில்லாம.

ஒரு விளப்பில்லாத படிப்புத்தான் படிக்குதுகள். சில வேளை டாக்குத்தர கட்ட டாக்குத்தருக்கு படிக்க வேணுமோ தெரியா. ஊராக்கள் போட்ட போட்டில இப்ப வெளிநாடொண்டில சேவை செய்யப் போட்டினமாம்.

பாரடா வீதி நிறைஞ்ச பிள்ளையள், எத்தின கனவுகள் கற்பனையள், ஒவொருபிள்ளையளும் ஒவ்வொரு லச்சியத்தோட தான் படிக்குதுகள். ஆனாப் பாரடா அரிவரியில படிக்கிற அவள பிள்ளையளும் அஞ்சாம் வேப்புக்குப் போறதில்ல. அஞ்சாம் வேப்பில படிக்கிற எல்லாப் பிள்ளையும் பத்தாம் வேப்புக்குப் போறதில்லை. ஆயிரத்தெட்டுக் காரணஞ் சொல்லு. பிறகும் ஓயெல் ஏயெலோட சிக்காரா வடிகட்டி. கொஞ்சம் பேர்தான் கம்பேசுக்குத் தகுதியாவினம். தகுதி இருந்தென்ன வயதி இல்லாம கன பிள்ளையள், வேலை தேடிப் போக சில பொம்பிளப்பிள்ளையள் கலியாணங்கட்டி வாழ்க்கையின்ர பெரும் பாக்கியத்தை அடைஞ்சிட்டம் எண்டு அடங்கிருவினம்.

உலகத்தில நாலெழுத்துப்படிச்சிட்டு வளந்தவையவிட தன்னளவில படிச்சவை முன்னேறினதாத்தான் சொல்லுறாங்களடா... பள்ளிக்கூடம் எண்டதே ஒரு பக்குவமான விசியந்தான் கண்டியோ வகுப்பு நடக்கயுக்கயே கள்ளத்தீன் தின்னுறது. வாத்திமாருக்கு பட்டம் வைக்கிறது, முன்னுக்கு பின்னுக்கு இருக்கிற பிள்ளையள டாவடிக்கிறது. வீட்டுப்பாடம் செய்யாம வந்திட்டு பக்கெண்டு பாத்தெழுதி நிரப்பிறது எண்டு எத்தின விளையாட்டுகளடா. ம் தனித்திறமை வேணுமடா... உன்னளவில நீயும் செய்திருப்பாய் நானுஞ் செய்திருக்கிறன். பள்ளிக்கூடம் அதில படிப்பிக்கிற வாத்திமார் எத்தினை பிள்ளையளச் சந்திச்சிருப்பினம். நான் நெக்கிறதடா நான் மட்டுந்தான் அந்த வாத்தியாரிட்ட படிச்சதெண்டு வளந்த பிறகு ஒரு வாத்தியாரச் சந்திச்சு கேட்டன், வாத்தியார் என்னை மறந்து போனன் எண்டு சொல்லி நினைவு படுத்திப் பார்த்து பிறகுதான் சொன்னார் "ஓ... நீ அவளா..." எண்டு. எனக்கெண்டா சிரிப்பு என்ர ஆச்சி சொல்லுவா ஒருகதை, " குளம் எத்தின குண்டியக் கண்டது. குண்டி எத்தினை குளத்தைக்கண்டது" அந்தக் காலத்துப் பழமொழி இப்ப உதெல்லாம் பொழிப்பு, கொண்டுகூட்டு, விளக்கவுரை எல்லாம் சொன்னாத்தான் விளங்கும்.

பள்ளிக்கூடங்களுக்கும் இன்னும் முழுசா வாத்திமார் வந்து சேரேல்லயாம். ஒவ்வொரு வாத்திமார் ரெண்டு வகுப்ப சமாளிக்கினயாம். எண்டு பேத்தி சொன்னாள். 'அடி போடி விசரி நாங்கள் படிச்ச ஆரம்பப் பள்ளியில அஞ்சாம் வேப்பு வரைக்கும் இருக்கும். ஆனா ரெண்டு ரீச்சர் மட்டுந்தான். ரீச்சர் பிள்ளையளுக்கு படிப்பு சொல்லிக் குடுத்துக் கொண்டிருக்க செல்லையாண்ணன் பெஞ்சாதி பள்ளிக்கூடக் கடவைக்க நிண்டு கத்துவா 'ரீச்சர் உவன் முத்தனை ஒருக்கா விடுங்கோ, பட்டிக்கால மாடுகளைச் சாய்ச்சு விட்டிட்டு வரக்காட்டி விடுறன்' எண்டு. ரீச்சர் முத்தனை 'போட்டு வாடா எண்டு கலைச்சு விடுவா... தங்கமணியக்கா தன்ர ஒருவயசுக் குழந்தையக் கொணந்து நாலாம் வேப்பில மகேசிட்ட குடுத்திட்டு 'ரீச்சர் சங்கக் கடைக்கொருக்கா போட்டு வந்து வாங்கிறன்' எண்டிட்டுப் போவா... இதெல்லாங் கடந்து படிச்ச நாங்களெங்க. படிக்கிற பொடியளுக்குக் காவலிருந்து படிக்க வைக்கிற நீங்களெங்க... ■



"இப்ப பள்ளிக்கூடத்துக்குப் பிள்ளையள் ஒழுங்காப் போகுதுகள். பழைய நடைமுறையப்போல எங்க 'போன'த் தடை செய்யட்டன் பாப்பம். இனி நடவாது. "சேம்புக்கு புளி விட்டாக்காதே சிறுவர்க்கினியது காட்டாதே" எண்டு சும்மாவே சொல்லுறது. பிள்ளையள் எல்லாரும் வசதியா இல்லை ஆனாலும் என்ன? கூலிக்குப் போறவனும் பிள்ளைக்கு ஒரு 'டச்' போன் வாங்கிக் குடுத்துத்தான் இருக்கிறான். இனியினி அது மாத்தேலாது. பள்ளிகூடங்களில படிக்கிற படிப்பும் அங்க வாங்கிற புள்ளியளும் வாழ்க்கைக்கு உதவுறதில்லை."

# சிறைக்குள் இருந்து பூக்கும் கதைகள்

## 1. ஊமை மோகம் நாவல் - சிவ ஆருரன்
## 2. வேப்பமரமும் பவளம் ஆச்சியும் - விவேகானந்தனூர் சதீஸ்

புதுப்புனல்-20

புலோலியூர் வேல்நந்தன்

தீம்புனலின் இவ்வார புதுப்புனலில் அறிமுகம் காண்பது வித்தியாசமான இரண்டு கதைப் பிரதிகள். ஈழப் படைப்புச் சூழலில் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டே அற்புதமான பல படைப் பாக்கங்களைத் தொடர்ச்சியாக தந்து கொண்டிருக் கும் இரு வேறுபட்ட படைப்பாளிகளின் மிக அண் மைய படைப்புக்கள் இரண்டை அறிமுகம் செய்ய வுள்ளேன். இத்தகையவர்களின் படைப்புக்களுக்கு களம் அமைத்துக் கொடுத்து இப் பிரதிகளை பதிப்பித்து வரும் ஜீவநதி பதிப்பகத்திற்கு நன்றியும் வாழ்த்தும்.

### ஊமை மோகம்

முதலில் சிவ. ஆருரன் வடமராட்சி அல்வாய் மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யா/ ஹாட் லிக் கல்லூரியில் என்னோடு சக வகுப்பு நண்பராய் ஒன்றாய்க் கற்றவர். அப்போதெல்லாம் நாம் பார்த்த சிவ. ஆருரன் வேறு இப்போது பார்க்கும் நிலை வேறு. பாடசாலைக் காலங்களில் அவர் பெரிதாக இத்தகைய ஆக்க இலக்கிய முயற்சிகளில் ஈடு பட்டவர் இல்லை. அவரது குடும்பச் சூழலும் சிறை வாழ்வுமே அவரை இத்துறை சார்ந்து உந்தித் தள்ளியது என்று கூறலாம். “யாழிசை” என்று அவ ரது சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற படைப்பு வழியாகவே அவர் அதிக கவனத்தைப் பெற்றார். பின்னர் யாவரும் கேளிர், வலசைப் பறவைகள், பூமாஞ்சாசோலை முதலிய அவரது நாவல்,




சிறுகதைப் படைப்புக்கள் வழி ஈழத்து வாசகப் பரப்பில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்தார். ஆங்கிலப் புலமையுடன் ஆங்கிலத்திலும் எழுதும் ஆற்றல் மிக்கவராக விளங்குகிறார்.

இவரது அண்மைய படைப்புகளில் ஒன்றாகவே ஊமை மோகம் என்ற இந் நாவல் படைப்பு அமைகி றது. இப் படைப்பு இவரது ஏனைய படைப்புக்களில் இருந்து சற்று வித்தியாசமானது. இவரே சொல்வ தைப் போல அறத்தை, பொருளைப் பேசிய நிலையில் இருந்து ஊமை மோகம் என்ற இந் நாவல் இன்பத்தை, காமத்தை, காதலைப் பேசும் ஒரு நாவலாக அமைந்து சிறப்புப் பெறுகிறது. வலசைப் பறவைகள் என்ற இவரது படைப்பு 2020 ஆம் ஆண்டுக்கான சாகித்திய விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட படைப்பாக விளங்கியதுடன் ஊமை மோகம் என்ற இந் நாவல் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான சிறந்த நாவல் விருதைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். உண்மையில் சிறைவாசம் அனுபவித்துக் கொண்ட தனது மனச் சிறையில் உணர்வுகளை கதைகளாக்கித் தரும் இவரது முயற்சி போற்றுவதற்குரியது.

ஒழுக்கத்தை உயிரெனப் போற்றி வாழும் எம் மண்ணின் மைந்தர்களுக்குச் சமர்ப்பணமாய் இந் நாவல் அமைந்துள்ளது. ஜீவநதி பதிப்பகத்தின் 175 ஆவது வெளியீடாக அமையும் அழகிய அட்டை வடிவமைப்பில் அமையும் இந் நாவலின் தந்துரையை நூலாசிரியர் வழங்கியுள்ளார். அவர் தம் உரையில் ஒழுக்க நெறியுடன் வாழ நினைக்கும் யாழ் மண்ணில் மத்திய தரக் குடும்பம் ஒன்றில் வாழ்வுக் கோலத் தையும் அதில் இழையோடிக் கிடக்கும் அபாக்கிய மான ஊமை மோகத்தையும் இந் நாவல் பேசுகின்றது என்கிறார். ஆண் பெண் பாலியல் உறவுகளை, காமத்தைக் கருவாகக் கொண்ட இந் நாவலைப் படைத்துள்ள போதும் எங்கும் ஆபாசமோ, விர சமோ தோன்றா வண்ணம் அழகியலோடு இந் நாவலைத் தந்துள்ளமை சிறப்புக்குரியது. பின்னட் டைக் குறிப்பில் பரணீதரன் இந்நாவல் பற்றியும் படைப்பாளி பற்றியும் குறிப்பிடும் போதும் ஈழத்து இலக்கிய உலகிற்கு கிடைத்த புதையல்களில் சிவ. ஆருரனும் வியக்கத்தக்க புதையல். சிறுகதை, நாவல் என ஆக்க இலக்கியத்தில் உச்ச நிலைப்படைப்பாளி யாக விளங்கி வரும் சிவ. ஆருரன் தமிழ்ச் சூழலில் பேசப்பட வேண்டிய பாலியல் பிரச்சினையை இந் நாவல் வழியாக வெளிப்படுத்தியுள்ளார் என்கிறார்.

திருமணமாகியும் குழந்தைப் பேறு இல்லா அனுசியா - சிவசங்கர் தம்பதியினரின் வாழ்வுக் கோல மும் அன்பு குறையாத வாழ்வும் இந் நாவல் வழி ஊமை மோகமாய் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. 1990 மேயில் தொடங்கும் நாவல் ஆண்டுகள் மாதங் களாய் நகர்ந்து 2018 மேயில் முடிகிறது. அந்த வகையில் தமிழ்ப் பண்பாட்டுக்கு கட்டுபட்டு வாழும் கணவன் - மனைவி இடையேயான பாலுணர்வுக் குழப்பத்தை எந்தவித ஆபாசமும் இன்றி மிக ஆழ மாக இந் நாவல் மூலம் சிவ. ஆருரன் வெளிப்படுத்தியுள்ளார். அன்பு, புரிந்து ணர்வு, விட்டுக் கொடுப்புக்கு முன் குறையொன்றும் இல்லை. இந்நாவலில் வரும் அனுசியா போன்ற அன்பைச் சொரியும் பெண் மனைவியாகக் கிடைத்தால் எந்த ஆணுக்கும் வாழ்நாள் என்றும் இனிமைதான் என்பதையும் இந்த ஊமை மோகம் நாவல் சிறப்புற எடுத்துக் காட்டியுள்ளது. அந்த வகை யில் அற்ப காரணத்துக்காக சிறைவாசம் அனுபவிக்கும் நண்பன் விரைவில் விடுதலை பெறப் பிரார்த்திப்பதுடன் நண்பனின் இந் நூலை புதுப்புனலின் இப் பகுதியில் அறிமுகம் செய்வதில் அக மகிழ்கிறேன். படைப்புப் பணி தொடர வாழ்த்துகிறேன்.


### வேப்ப மரமும் பவளம் ஆச்சியும்

அடுத்த இப் பகுதியில் அறிமுகம் காண்பது கிளிநொச்சி விவேகானந்த ஊரைச் சேர்ந்த சிறைக் கைதியாக வாழ்ந்து வரும் சதீஸ் அவர்களது வேப்ப மரமும் பவளம் ஆச்சியும் என்ற சிறுக தைத் தொகுப்பானது சூழ்நிலை அரசியல் கைதியாய் சிறைக்குள் இருந்தவாறு இவர் இதுவரை நான்கு நூல் களை வெளியிட்டுள்ளார். இது அவரது சிறுகதைக ளைக் கொண்டமையும் ஐந்தாவது நூலாகும். 2012 இல் இரும்புக் கதவுக்குள்ளிருந்து- கவி தைத் தொகுப்பு, 2016 இல் விடியலைத் தேடும் இரவுகள் கவிதைத் தொகுப்பு, 2017 இல் சிறையி லிருந்து சிங்கள சகோதரனுக்கு என்ற கவிதைத் தொகுப்பு மற்றும் மனச் சிறையிலிருந்து ஆகிய படைப்புக்களை இவர் இதுவரை வெளிக் கொணர்ந்துள்ளார். அந்த வகையில் ஜீவநதியின் 197 ஆவது வெளியீடாக இவரது “வேப்பமரமும் பவளம் ஆச்சியும்” என்ற சிறுகதைத் தொகுப்பு அழகிய அட்டைப்பட வடிவமைப்புடன் வெளிவந்துள்ளது. இதில் உள்ள கதை கள் தினகரன், உதயன், சுடரொளி, வீரகேசரி, கரை எழில் ஆகிய பத்திரி கைகளில் வெளி வந்த கதைகளாக அமைந்துள்ளன. தாயாக பெருமைப்படு கிறேன் என இவரது தாயார் திருமதி சே. மகேஸ்வரி அவர்கள் வாழ்த்துரை ஒன்றைத் தந்துள்ளார். அந்த வகையில் அதில் அவர் குறிப்பிடும் “மகனே! எத்தனை இடர்கள் எத்தனை தடைகள் உன்னை சூழ்ந்தாலும் ஆண்டவன் துணையோடு அத்தனையும் கடந்து ஊக்கத்தை இறைத்து உன் ஆக்கப் பணி யைத் தொடர்ந்திடு இதற்கு இந்த அம் மாவின் ஆசீர்வாதங்கள் உன்னோடு இருக்குமய்யா இறையருளால் விரைவில் இரும்புச்சிறை திறக்குமய்யா,” என்ற வரிகள் நெஞ்சை உருக்குவன. அடுத்து “படைப்பாளியின் சொற்கள்” என்ற தலைப்பில் சதீஸ் அவர்கள் தனது இச் சிறுக தைத் தொகுப்பின் உள்ளடக்கம், தனது நிலை, தனக்கு உதவியோருக்கான நன்றி, தனக்கான சவால் கள், இவற்றுக்குள்ளும் இன்னும் எழுதுவேன் என்ற நம்பிக்கையையும் விதைத்து நிற்கிறார்.

இத் தொகுப்பில் எல்லாமாக அவரால் அவ்வப் போது எழுதப்பட்ட 11 சிறுகதைகள் இடம்பெற் றுள்ளன. “அப்பா எப்ப வருவாரம்மா” என்ற கதை யோடு இத் தொகுப்பு தொடங்குகிறது. ஒரு சிறைக் கைதியின் வாழ்வையும் அவரைப் பிரிந்து வாழும் உறவுகளின் தவிப்பையும் அனுபவ தரிசனமாய் இக் கதை பேசுகிறது. சத்தியன், சியாமினி, ஓவியா என்ற பாத்திரங்கள் வழி இக்கதை நகர்த்தப்படுகின்றது. ஒரு வகையில் இது கதாசிரியரின் சொந்தக் கதையாக வும் இருக்கலாம். சிறையில் வாழும் பல தமிழ் அரசி யல் கைதிகளின் வாழ்வியலைப் பேசும் ஒரு பதச் சோறாக இக்கதை தாய், தந்தை, மகள் பாசப்பின் னணியில் எழுதப்பட்டு நெஞ்சைப் பிளிகிறது. மின்வெட்டு என்ற கதை இன்றைய எமது வீடுகளில் பெண்களை ஆக் கிரமித்துள்ள தொலைக் காட்சித் தொடர் நாடக மோகத்தை, குடும்ப உறவுகளுக்கிடையி லான அன்னியோன்யம் இன்மையை, ஒரு மின் வெட்டு நாளை அடிப்படை யாகக் கொண்டு பேசுகிறது. குமரனும் நலீமும் என்ற சிறுகதை நீண்ட இடைவெளிக்குப் பின் ஒரு பஸ் பயணத்தில் சந்திக்கின்ற குமரன் - நலீம் ஆகியோ ருக்கிடையிலான கிளிநொச்சியின் பள்ளிக்கால நட்பு நினைவுகளையும் தமிழ் -முஸ்லிம் உறவையும் பேசுகிறது. மரண வாக்கு மூலம் என்ற கதை தமிழரி டம் இருக்கும் வேலிச் சண்டை, காணிச் சண்டை என்பவற்றை கணேசபிள்ளை, சோமசுந்தரம், பாலசிங்கம் என்ற பாத்திரங்கள் வழி பேசி அத்தகைய காணிகளை இன்று இராணுவம் கையகப்படுத்தியுள்ள நிலையும் அதை மீட்பதற்கான போராட்டங்களையும் அதற்கான உறுதியையும் பாலசிங்கத்தின் மரண வாக்குமூலமாய் பேசி நிற்கிறது.

சற்று நீண்ட கதையாக அமைந்தாலும் அதைச் சொன்ன பாணி சிறப்புக்குரியதாய் அமைந்துள்ளது. “எப்போ வி(மு) டியும் என்ற கதை முற்று முழுதாய் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை யைக் களமாகக் கொண்டு தமிழ் சிறைக் கைதிகளின் மன ஏக்கத்தையும் அதை விளங்கிக் கொள்ளும் சில சிங்கள காவலர்களையும் படம் பிடித்துக் காட்டுவ துடன் இத்துயரம் எப்போது முடியும் என்ற வினாவை யும் எழுப்பி நெஞ்சைப் பிளிகிறது.

‘அண்ணே பெண்டாட்டி’ என்ற கதை மலையகத் தோட்டச் சூழலில் பெண்கள் போகப் பொருளாகப் கையாளப்படும் துயரை அந்த மக்களின் மொழியில் பேசும் கதையாக அமைகிறது. காலம் கடந்த




கௌரவம் என்பது தந்தையை சுமையாகக் கருதி தன்னோடு வைத்துப் பராமரிக்காமல் முதியோர் இல்லத்தை நாடும் நிலையை அதன் போலிக் கௌர வத்தை பேசும் கதையாக அமைகிறது. ‘வேப்ப மரமும் பவளம் ஆச்சியும்’ என்ற கதை வீதி அபிவிருத்தி என்ற போர்வையில் அழிக்கப்படும் மரங்களின் நிலையில் போலியான அபிவிருத்தித் திட்டங்களையும் பவளம் ஆச்சி என்ற முதிய பாத்திரத்தின் வாழ்வும் - மரணமும் பின்னணியில் பேசும் கதையாகச் சிறப்புப் பெறுகி றது. சிறைக்குள் இருந்தும் ஈழத்துப் படைப்புத் துறைக்கு பங்களிக்கும் இவர்கள் இருவரையும் வாழ்த்துவதுடன் இவர்கள் விரைவில் விடுதலை பெற பிரார்த்தித்து இவ்வார புதுப்புனலை நிறைவு செய்கிறேன். ■

# எழுபது ஆண்டுகாலம்: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடையாளம்!

அவதானி

கழுதை கெட்டால் குட்டிச்சுவர்! கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனதைப் போன்று !

கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை? பொன்னைச் சுமந்தாலும் கழுதை கழுதைதான் ! குதிரையில்லா நாட்டில் கழுதை அரசாளும் ! அழிந்த கொல்லையில் குதிரை மேய்ந்தாலென்ன, கழுதை மேய்ந்தாலென்ன? காரியமாகும் வரையில் கழுதையானாலும் அதன் காலைப்பிடி !

இத்தனை முதுமொழிகள் கழுதை பற்றி இருக்கின்றன. இதற்கு மேலும் இருக்கலாம். ஆனால், தன்னைப் பற்றி இவ்வளவு முதுமொழிகள் இருப்பது கழுதைக்குத் தெரியாது.

நாம், ஆறறிவு படைத்த மாந்தர்கள். உயர் திணை வகுப்பார். ஆனால், அஃறிணை உயிரினங்கள் குறித்து ஏராளமான முதுமொழிகளை உருவாக்கியிருக்கின்றோம்.

சமகாலத்தில் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் சேடம் இழுத்துக்கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப்பற்றி யோசித்தபோதுதான் எமக்கு கழுதை நினைவுக்கு வந்தது.

இலங்கையிலிருக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் துரோகத்தினாலும் காட்டிக்கொடுப்பினாலும் காலை வாரிவிட்டதனாலும், அடுத்துக் கெடுத்தமையினாலும் வளர்ந்தவைதான்.

அது சிங்களக் கட்சிகளாயிருந்தாலென்ன, தமிழ்க் கட்சிகட்சிகளாயிருந்தாலென்ன, முஸ்லிம் கட்சிகளாயிருந்தாலென்ன அனைத்தும் மேற்குறித்த இலட்சணங்களுடன்தான் வாழ்ந்தன. அல்லது தேய்ந்தன.பெரும்பாலும் தலைமைப் பதவிப்போட்டிகளினாலும் கட்சிகள் பிளவுபட்டு புது புதுக்கட்சிகள் தோற்றம் பெற்றன.





அண்மைக்காலத்தில் ஆப்பிழுத்த பிராணியைப் போன்று மாறியிருக்கிறது இலங்கையின் மூத்த அரசியல் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி. இக்கட்சியின் இன்றைய நிலைக்கு மைத்திரி மாத்திரம் காரணமல்ல. அவருக்கு முன்னர் இக்கட்சியின் தலைமைப்பீடத்திலிருந்தவர்களும்தான் காரணம்.

இங்கிலாந்தில், சொலமன் வெஸ்ட் ரிட்ச்வே டயஸ் பண்டாரநாயக்கா என்ற நீண்ட பெயருடன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்று ஐரோப்பிய நாகரீகத்துடன் உடை அணிந்து திரும்பியவர் முதலில் ஐக்கிய தேசியக்கட்சி என்ற பச்சை நிறக்கட்சியில் இணைந்து அதன் தேர்தல் சின்னம் யானையை ஏற்றுக்கொண்டவர்தான்.

அக்கட்சியின் தலைவரும் சுதந்திர இலங்கையின் முதல் பிரதமருமான டீ. எஸ். சேனநாயக்கா, 1952 ஆம் ஆண்டு கொழும்பு காலிமுகத்திடலில் குதிரையில் சவாரி செய்தபோது தவறிவிழுந்து இறந்ததையடுத்து, தனக்கே பிரதமர் பதவி தரப்படல் வேண்டும் என்றார். ஆனால், அவ்விடத்திற்கு முந்திக்கொண்டு வந்தவர் சேர். ஜோன் கொத்தலாவல.

அதனால் வெகுண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்ற நீல நிறக்கட்சியையும் அபயம் அளிக்கும் அடையாளமாகத் திகழும் கை சின்னத்துடனும் பௌத்த சிங்கள தேசிய கலாசார உடையுடனும் மக்கள் முன்னால் தோன்றி, ஐம்பெரும் சக்திகளை திரட்டிக்கொண்டு பண்டாரநாயக்கா பிரதமரானார்.

அந்த இயக்கத்திற்கு அவர் சூட்டியபெயர் பஞ்சமா பலவேகய. அதில் தொழிலாளர், விவசாயிகள், ஆசிரியர்கள், வைத்தியர்கள், பௌத்த பிக்குகள் உள்வாங்கப்பட்டனர். விகாரைகளில் தங்கியிருக்கவேண்டிய, பொது மக்கள் தரும் தானத்தை உட்கொண்டு புலனடக்கி வாழ்ந்து தர்ம உபதேசம் செய்துகொண்டிருக்கவேண்டிய பௌத்த பிக்குகளை அரசியலுக்கு இழுத்து வந்தவரும் இந்த பண்டாரநாயக்காதான்.

பௌத்த சிங்கள எழுச்சியுடன் தனது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை கட்டி எழுப்பிய அவர், இறுதியில் தான் அரசியலில் வளர்த்துவிட்ட பௌத்த பிக்குகளின் பிரதிநிதி ஒருவராலேயே 1959 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

வளர்த்த கடா இறுதியில் மார்பில் பாய்ந்தது. இந்தக்காட்சிகள் ஈழத்தமிழர் அரசியலிலும் இடம் பெற்றுள்ளன. (உதாரணம் : அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், தருமலிங்கம், ஆலாலசுந்தரம் )

கணவர் பண்டாரநாயக்காவின் மரணத்தையடுத்து அதுவரையில் குடும்பப்பெண்ணாக வலம் வந்த அவரது துணைவியார் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இலங்கைப்பிரதமராக மட்டுமல்ல, உலகின் முதல் பெண் பிரதமர் என்ற கீர்த்தியையும் பெற்றார்.

தந்தையார் பண்டாரநாயக்கா கொல்லப்பட்ட வேளையில் 14 வயதிலிருந்த சந்திரிக்காவும், 10 வயதிலிருந்த அநுராவும் காலப்போக்கில் அரசியலுக்குள் பிரவேசித்து, தந்தை தொடக்கிய கட்சியையும் வளர்க்கப் பாடுபட்டனர்.

இவ்வேளையில் சினிமா கலைஞரும் சமூக ஆர்வலருமான விஜயகுமாரதுங்கா இக்கட்சியினுள் பிரவேசித்து, தனது முகக்கவர்ச்சியினாலும் சினிமா பிரபலத்தினாலும் முன்னேறி வந்ததை அநுராவால் சகிக்க முடியாமல் உட்கட்சி மோதல்கள் படிப்படியாக அதிகரித்தது. விஜயகுமாரதுங்க சில இடைத்தேர்தல்களில் அக்கட்சியின் சார்பில் களமிறக்கப்பட்டபோதும் அநுரா அவரை ஆதரித்து கூட்டங்களில் பேசுவதற்கு முன்வரவில்லை.

1977 இல் ஜே.ஆர். ஜெயவர்தனாவின் தலைமையில் ஐக்கிய தேசியக்கட்சி பதவிக்கு வந்ததும் செய்த முதல் வேலை, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமையை பறித்ததுதான். அவரை மேடைகளின் பொம்மையாக - பேசா மடந் தையாக வைத்துக் கொண்டு விஜயகுமாரதுங்க பிரசாரங்களின் மூலம் கட்சியை முன்னெடுத்தார்.

கட்சிப்பிரசாரங்களுடன் அவரது கடைக்கண்பார்வை சந்திரிக்காவில் விழுந்ததையடுத்து இருவரும் மணமுடித்தனர். இதனால் வெகுண்டவர் அநுரா. இறுதியில் அக்கட்சிக்குள் பிளவு தோன்றியது. அம்மாவா? தம்பியா? கட்சியா? அல்லது தனது காதல் கணவனா..? என்ற இக்கட்டுக்குள்ளிருந்த சந்திரிக்கா, “ உன் வழியே என் வழி “ என்று காதல் கணவனுடன் மக்கள் கட்சியை தொடக்கினார்.

ஒரு கட்டத்தில் மதவாச்சியத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், பிரதமர் பதவியில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இருந்த காலத்தில் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது பதில் பிரதமராகும் வாய்ப்பு பெற்றவருமான மைத்திரிபால சேனநாயக்காவுடன் இணைந்து அக்கட்சியை அநுரா பண்டாரநாயக்கா கைப்பற்றினார்.

பின்னர் அங்கிருந்து கசப்புணர்வுடன் வெளியேறிய அநுரா ஒரு கட்டத்தில் பிரேமதாசவின் மறைவுடன் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்தார். இலங்கை அரசியலில் இரண்டு பெரிய கட்சிகளின் வரலாற்றில் தலைமைப்பதவிகள், யாரோ ஒருவரது மரணத்துடன்தான் மாறிவந்துள்ளன.

1988 இல் விஜயகுமாரதுங்கா கொல்லப்பட்டார். 2000 ஆம் ஆண்டில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் 2008 இல் அவரது மகன் அநுராவும் இறந்தனர்.தந்தையையும் கணவரையும் துப்பாக்கிதாரிகளிடம் பறிகொடுத்த சந்திரிக்கா, பின்னர் தாயையும் தம்பியையும் அடுத்தடுத்து காலனிடம் பறிகொடுத்துத் தனிமரமானார்.





எனினும் தந்தை தொடக்கிய கட்சியை வளர்த்தவாறு, முதலில் மேல்மாகாண முதலமைச்சராகவும், பின்னர் நாட்டின் பிரதமராகவும் அதனையடுத்த இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகவும் பதவி வகித்தார்.

தனக்குப் பின்னர் தந்தை உருவாக்கிய கட்சியை வளர்ப்பதற்காக அவர் பெரிதும் நம்பியிருந்தவர்தான் மைத்திரிபால சிறிசேன. இவர் 1989 ஆம் ஆண்டு தனது பொலன்னறுவை தொகுதியிலிருந்து அரசியல் பிரவேசம் செய்தவர்.

மகிந்த ராஜபக்ஷவுக்கும் சந்திரிக்காவுக்குமிடையில் நிழல் யுத்தம் ஆரம்பமானதும், 2015 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராகக் களம் இறக்கப்பட்டவர்தான் இந்த மைத்திரி. அந்தத் தீர்மானத்திற்கு முக்கிய சூத்திரதாரியாக திகழ்ந்தவர்தான் சந்திரிக்கா.

**“பண்டாரநாயக்கா, 1952 இல் எந்தப் பச்சைக்கட்சியிலிருந்து பிரிந்தாரோ, அதே கட்சியில் அவரது மகன் அநுராவும் பிற்காலத்தில் இணைந்து அக்கட்சியை அழித்தார். மகள் சந்திரிக்காவும் ரணில் விக்கிரமசிங்காவுடன் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தி, தனது கட்சியிலிருந்து மைத்திரிபால சிறிசேனவை மகிந்தவுக்கு எதிராக பொது வேட்பாளராக களம் இறக்கினார்.”**

அந்த அறிவிப்பு வெளியாவதற்கு முதல்நாள் இரவு அப்போதிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் அமர்ந்து இராப்போசன விருந்தில் முட்டை, அப்பம் சாப்பிட்டவரான மைத்திரிபால சிறிசேனா, அதன் பிறகு மகிந்தருக்கு ஆப்பு வைத்தார்.

பண்டாரநாயக்கா, 1952 இல் எந்த பச்சைக்கட்சியிலிருந்து பிரிந்தாரோ, அதே கட்சியில் அவரது மகன் அநுராவும் பிற்காலத்தில் இணைந்து அக்கட்சியை அழித்தார். மகள் சந்திரிக்காவும் ரணில்விக்கிரமசிங்கவுடன் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தி, தனது கட்சியிலிருந்து மைத்திரிபால சிறிசேனவை மகிந்தவுக்கு எதிராக பொது வேட்பாளராக களம் இறக்கினார்.

அதன் பலாபலனை சந்திரிக்கா தற்போது அவதானிக்கின்றார். மைத்திரிக்கு இன்றைய அரசில் அமைச்சுப் பதவியும் கிட்டவில்லை. சந்திரிக்காவின் தந்தையார் தொடக்கிய கட்சி தற்போது சேடம் இழுத்துக்கொண்டிருக்கிறது. இதற்கு யார் யார் காரணம்? என்பதை சந்திரிக்காவும் மைத்திரியாரும்தான் சுயவிமர்சனம் செய்து பார்த்தல் வேண்டும். ராஜபக்ஷ குடும்பத்தினரின் காட்டில் மழைபெய்வதற்கு இவர்கள்தான் காரணம். அந்த மழையும் இனி எத்தனை நாட்களுக்கு...? ■



# மீண்டும் தொடங்கிய வெடிப்புகள்: யார் காரணர்?

செல்வழகன்

இலங்கையில் ஒரு காலத்தில் குண்டுகள் வெடித்தன. வீதிகளில், காட்டில், குடியிருப்புகளில், பஸ்ஸில் என எங்கும் குண்டு வெடித்துக் கிலி கொள்ள வைத்தது. 2009 இன் பின் அந்தக் காலம் போய் விட்டது. அப்பாடா என அயர்ந்த போது 2019 இல் கிறிஸ்தவ தேவாலயங்களை இலக்கு வைத்து வெடித்த குண்டுகள் மீண்டும் பயத்தையும், பீதியையும் ஏற்படுத்தியிருந்தன. அதன் பின் கண்ணுக்குத் தெரியாத கிருமியின் தாக்குதலால் உலக நாடுகள் பலவும் போல் இலங்கையும் நிலைகுலைந்தது. நாடு பொருளாதார நலிவுக்கு உட்பட்டு நிமிர்ந்தெழ முடியாமல் தத்தளித்து நிற்கும் சூழலில் இப்போதும் வெடிப்புகள் நிகழ ஆரம்பித்துள்ளன.

கடந்த சில மாதங்களாக காஸ் சிலிண்டர்களைத் தேடி தெருவெங்கும் மக்கள் அலைந்த காட்சியினை ஊடகங்கள் பதிவு செய்தன. பல்வேறு பணிகளையும் விட்டு விட்டு நீண்ட வரிசைகளில் காத்திருந்து சமையல் எரிவாயுவைப் பெற முயன்று, கிடைத்தவரையில் அதிர்ஷ்டம் என்றளவில் பெற்றுக் கொண்டனர். ஏனையோர் வெறுங்கையுடன் திரும்பினர். அப்போது அவர்கள் அரசாங்கத்தைத் திட்டியதையும் ஊடகங்கள் காண்பித்தன. அவர்கள் மட்டுமல்ல, விவசாயிகள், மீனவர்கள், பெருந்தோட்டத் தொழிலாளர்கள், அரசாங்க ஊழியர்கள், தனியார்துறையினர் என்று பலரும் அரசாங்கத்தின் மீது அதிருப்திக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

கொரோனாவால் பொருளாதார நலிவுக்கு உட்பட்ட மக்களை - பனையாலே விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல- விலைவாசி உயர்வு மேலும் வாட்டி வதைக்கிறது. மூன்று வேளை உணவுண்ண முடியாமல் கால் வயிற்றுடன் காலங் கழிக்க வேண்டிய நிலைக்கு அன்றாடங் காய்ச்சிகளான மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். நாடு பட்டினியை நோக்கிச் செல்கிறது என்று எதிர்க்கட்சிகள் குரலெழுப்ப ஆரம்பித்து விட்டன. நாட்டில் எதிர்காலத்தில் பல பொருட்களுக்கான தட்டுப்பாட்டு நிலை ஏற்படலாம் என்று வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தனவே ஆரூடம் கூறியுள்ளார். இன்றைய நிலையில் மக்களுக்குத் தேவையான பால்மா, ரின் மீன், சீனி, கோதுமை மா, சீமெந்து, சமையல் எரிவாயு என்பவை அருந்தலாக உள்ளது. சிலவற்றுக்குத் தட்டுப்பாட்டு நிலையும் உள்ளது.

தட்டுப்பாடான பொருட்கள் விலை அதிகரிப்பின் பின்னரே சந்தையில் ஓரளவு புழக்கத்துக்கு வந்தன. இப்போது மீண்டும் தட்டுப்பாட்டு நிலை ஏற்பட்டிருப்பது மேலும் விலை அதிகரிப்பதற்காகவே என்று வர்த்தகர்கள் சொல்கிறார்கள். தமக்கு தாராளமாகப் பொருட்கள் விநியோகிக்கப்பட்ட நிலை இன்றில்லை என்கின்றனர் அவர்கள். தாம் கேட்பதில் அரைவாசி அல்லது கால்வாசியே கிடைப்பதாகவும், அதைத்தான் தாம் வரையறுத்த அளவில் தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதாகவும் அவர்கள் சொல்கிறார்கள். அவை தவிர்ந்த எல்லாப் பொருள்களின் விலைகளும் உயர்வடைந்து விட்டன. 180 ரூபாவுக்கு விற்ற பிஸ்கட் பொதி 220 ரூபாவுக்கு விற்கின்றது. கடந்த வாரம் 105 ரூபா விற்ற கோதுமை மா விலை அதிகரிப்புச் செய்தி வர முன்னரே 120 ரூபாவாகி விட்டது.

சமையல் எரிவாயுவைப் பொறுத்தவரை மஞ்சள் நிறலாப் எரிவாயுவுக்கு தட்டுப்பாட்டு நிலைமை தொடர்ந்தும் நீடிக்கிறது. நீல நிற லிற்றோ எரிவாயு சிலிண்டர்களை இடைக்கிடை ஏற்படும் தட்டுப்பாட்டிற்கு மத்தியில் ஓரளவு பெற்றுக் கொள்ள முடிகிறது. இந்த நிலையிலேயே சமையல் எரிவாயு சிலிண்டர்களின் வெடிப்பு நாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெற்றுள்ளது. இப்பத்தி எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் வேளை நாட்டின் பல பகுதிகளிலும் 40ற்கும் மேற்பட்ட எரிவாயு சிலிண்டர்கள் வெடித்துள்ளன. ஒரு உயிர் காவு கொள்ளப்பட்டுள்ளது. எனினும் அது தற்கொலை என பொலிசார் தெரிவித்துள்ளனர். வியாழனன்று ஒரு குடிசை தீப்பற்றியதில் சிறுமி ஒருவர் உயிரிழந்தார். இதற்கு என்ன காரணம் என்பது வெளிப்படுத்தப்படவில்லை.

சிலிண்டர் வெடிப்பது போல இந்த அரசாங்கமும் வெடித்துச் சிதறும் நாள் தொலைவில் இல்லை என்கிறது ஐக்கிய மக்கள் சக்தி. அதன் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார எரிவாயு சிலிண்டர் வெடிப்பு என்பது அரசாங்கத்தின் சதித் திட்டம் என்று தெரிவித்துள்ளார். இந்தியாவில் இருந்து சமையல் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது என்ற சந்தேகம் நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அரச ஆட்சியாளர்களின் புதல்வர் ஒருவரின் பெயரில் இந்த இறக்குமதி நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எதிர்க் கட்சிகள், அமைப்புக்கள் பலவும் சிலிண்டர் வெடிப்பை அரசாங்கம் சரிவரக் கையாளவில்லை என்றே விமர்சிக்கின்றனர். இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவிலும், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையிலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாட்டிலுள்ள மக்கள் ஒரு காலத்தில் விறகையே பயன்படுத்தினர். பதவிக்கு வந்த அரசாங்கங்கள் மக்களை சமையல் எரிவாயுவுக்குப் பழக்கப்படுத்தின. விறகுச் செலவை விட சமையல் எரிவாயுவின் செலவு குறைவு என்ற எண்ணம் மக்களிடத்தில் தோற்றுவிக்கப்பட்டது. இன்று பல வீடுகளின் சமையலறையில் அடுப்புப் புகடுகளே இல்லை. மாறாக எரிவாயு சிலின்டர் வைத்து எரிவாயு அடுப்பு வைக்கும் முறையே ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனால் தான் இந்தத் திண்டாட்டம். காஸ் இல்லாமல் நாங்கள் எங்கை போறது? என்று ஊடகங்களில் மக்கள் கேள்வி கேட்கிறார்கள். அந்தளவுக்கு நிலைமை மாறியுள்ளது.



இலங்கையில் பயன்படுத்தப்படும் எரிவாயு சிலிண்டர்களில் 70 வீதம் பியூட்டேன் வாயுவும், 30 வீதம் புரொப்பேன் என்ற வாயுவும் நிரப்பப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சீதோஷ்ண நிலைக்கேற்ப உலக நாடுகளில் இந்த அளவில் மாறுபாடு உள்ளது. வெப்பநிலையோடு தொடர்புடைய இந்த வாயு நிரப்பும் வீதத்தில் மாறுபாடு ஏற்படும் போது சிலிண்டர் வெடிப்பதாகச் சொல்லப்படுகிறது.


எது எப்படியோ இதனை ஆராய ஜனாதிபதி ஒரு குழுவை நியமித்துள்ளார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட பல குழுக்களில் இதுவுமொன்று. அந்தக் குழுவும் ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து தீர்வைக் கூறும். அதுவரை வெடிப்புகளின் கதைகளைக் கேட்டுக் கொண்டிருப்போம். ■

# “தமிழ் இந்தியப் பற்றற்ற மொழி”

## தமிழவனின் ‘தமிழுணர்வின் வரைபடம்’ எனும் நூல் பற்றிய சில சிந்தனைகள்

சா.திருவேணிசங்கமம்

அண்மையில் தமிழவனின் ‘தமிழுணர்வின் வரைபடம்’ என்னும் நூலைப் படிக்க நேர்ந்தது. இந்நூல் வழமைக்கு மாறான பல கருத்துக்களை முன்வைக்கிறது. இன்றைய தமிழ் சமூகத்தில் காணப்படும் உணர்வுபூர்வ அம்சங்களுக்குப் புது விளக்கங்களைத் தருகிறது. பகுத்தறிவு வாதிகளாலும் மார்க்சிய வாதிகளாலும் சிலவகை அரசியல் வாதிகளாலும் வெறும் உணர்ச்சிக் கொந்தளிப்பு என்று எள்ளி நகையாடப்படும் தமிழுணர்விற்கு ஓர் அறிவார்ந்த விளக்கம் தருவது இந்நூலின் சிறப்பம்சம் எனலாம். சுருக்கமாகச் சொன்னால் எல்லோரும் போன தடத்தில் போகாமல் தமிழவன் புதுவழியில் சிந்திக்கிறார் என்பது தெளிவாகிறது. அதனால் இந்நூலைப் படிக்கும் போது எனது சிந்தனையில் எழுந்த பிரதிபலிப்புகளை வாசகருடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.




இந்தியாவின் புராதன மொழிகள் எனக் கருதப் படுபவை தமிழும் பிராகிருதமும் சமஸ்கிருதமும் ஆகும். பிராகிருதம் திருத்தமடைந்து சமஸ்கிருதம் உருவானது. பிராகிருதம் பாகவத மொழி என்றும் சமஸ்கிருதம் வடமொழி என்றும் தமிழில் வழங்கப்படுகின்றன. இம்மொழிகள் ஆதிக்க மொழிகளாகித் தமிழ் மீது தீங்கு விளைக்கும் தாக்கத்தைச் செலுத்தும் போதெல்லாம் தமிழ் தனது சுயத்தைக் காப்பாற்றிக்கொள்ள போராடி இருக்கிறது. கவிஞர்களும் அறிஞர்களும் தோன்றி தமிழைப் புகழ்ந்து தள்ளி இருக்கிறார்கள் தமிழைச் சிவனோடும் முருகனோடும் அகத்தியனோடும் இணைத்துப் புனிதப்படுத்தி இருக்கிறார்கள். இவ்வாறெல்லாம் ஒரு மொழியை, பரிவர்த்தனை ஊடகம் என்று சொல்லப்படுவதை உயர்த்துவதன் நோக்கம் என்ன? அது ஒரு தற்காப்பு உணர்ச்சி, இந்த உணர்ச்சிக்கெதிராக நிற்பவர்கள் இனத்தை, மொழியை அழிக்க முனைபவர்கள் அல்லது அவ்வாறான எண்ணம் கொண்டவர்களுக்குத் துணைபோகிறவர்கள் என்று தமிழர்களின் சமூக மனம் கருதுகிறது என்கிறார் தமிழவன்.

“தமிழ் என்னும் மூலப்படிமம் நாடகீயமாய், சடங்காய், கோபமாய் ஆக்ரோசமாய், மௌடீகமாய், மூடநம்பிக்கையாய் வெளிப்படும் அதே நேரம் ஆழ்ந்த தர்க்கமாயும் விசாலிப்பு மரபாயும் கூட அது அமைகிறது. இதனை எதிரும் புதிருமான உணர்வின் அல்லாட்டமாய் பார்க்கவேண்டும். ஏதோ உணர்வு மட்டும் பிரதிபலிப்பதாய்ப் பார்க்கக் கூடாது. பார்த்தால் தவறு செய்தவர்களாவோம்” என்று கூறி இந்த மூலப்படிவ உணர்வு சமூகங்களிடையே செயல்ப் படுவதை யூஜின் இர்சிஸ்க், கிளிபோர்ட் கிட்ஸ், பெர்டன் ஸ்ரெயின் போன்ற மானிடவியலாளர்களும் ஒப்புக்கொள்கின்றனர் என்று கூறுகிறார் தமிழவன்.

தமிழர்களிடையே உள்ள மூலப்படிம உணர்வு மிகப் புராதனமானது. தொல்காப்பியம் கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலேயே தமிழ் வழங்கும் பகுதிகளை எல்லாம் தமிழ் கூறும் நல்லுலகு; என்று புகழ்ந்துரைக்கிறது. புறநானூற்றுக் கவிஞன் ஒருவன் கல்லா நீள் மொழி கதநாய் வடுகர் கன்னட தெலுங்கு மொழிகளை எள்ளி நகையாடுகிறான். அதன் மூலம் அம்மொழிகளைத் தாழ்த்தி தன்மொழியை உயர்த்தக் கொள்கிறான். கி.மு 3 ஆம் நூற்றாண்டளவில் சமண, பௌத்த மதங்கள் தமிழ் நாட்டிற்கு வந்தபோது அம்மதத் துறவிகள் தம் மதக் கருத்துக்களை கன்னட தெலுங்குப் பிரதேசங்கிளில் செய்தது போல, பிராகிருத பாளி மொழிகளுடாகப் பரப்ப முயன்றனர். இது தமிழர்களிடம் எடுபடவில்லை. காரணம் தமிழ் ஏற்கெனவே செழுமையுற்றிருந்ததும் தமிழ் நாடெங்கும் பரவலான கல்வி அறிவும் எழுத்தறிவும் காணப்பட்டதுமே ஆகும். இதனைச் சங்கத்தொகுப்பில் அரசர் முதல் சாதாரண கைவினைஞர் வரை பலதரப்பட்டவர்களின் கவிதைகள் காணப்படுவதிலிருந்தும் குக்கிராமங்களில் கண்டெடுக்கப்பட்ட தொன்மையான பனையோட்டுப் பொறிப்புகளில் சாதாரண மக்களின் பெயர்கள் இடம் பெற்றிருப்பதிலிருந்தும் அறியலாம். இதனை மதல் அறிவொளிக் காலம் என்று புகழ்பெற்ற கல்வெட்டு அறிஞர் ஐராவதம் மகாதேவன் குறிப்பிடுகிறார்.

சமஸ்கிருதத்தைத் தேவ பாசை ஆக்கி இந்திய மொழிகளை அதன் சாயலில் வளர்த்து அம்மொழிகளெல்லாம் சமஸ்கிருத வழிவந்தன என்ற கருத்தியலுக்குத் தலைவணங்காமல் தமிழ் தனித்து நிற்கிறது. “இந்திய மொழிகளுள் தமிழ் மொழியைத் தவிர்த்து அனைத்தும் சமஸ்கிருத மரபு மூலத்திலிருந்து உருவானவையே” என்று 2001 இல் நடந்த அகில உலக சமஸ்கிருத மகாநாட்டில் அப்போதைய இந்தியப் பிரதமர் அடேல் பிஹாரி வாஜ்பேயி பேசியது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சமஸ்கிருத இந்தியாவிற்கு வெளியே தமிழ் இருப்பதனாலும் சமஸ்கிருதத்தை அது அவ்வவ்போது எதிர்த்து வருவதனாலும் தமிழை இந்தியப்பற்றற்ற மொழி என்கிறார் தமிழவன்.

தமிழ் மொழிக்குள் ஒரு நீண்ட பிராமணிய எதிர்ப்புப் பாரம்பரியம் உள்ளது. பிறப்பினால் உயர்வு தாழ்வு ஏற்படுகிறது, யாகம் செய்து பிராமணர்களுக்குத் தானம் கொடுத்து பாவத்தைப் போக்கி கொள்ளலாம், வேதம் எக்காலத்துக்கும் ஏற்றது போன்ற பிராமணியக் கருத்தியலுக்கு எதிராக

“வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்” என்றும்
“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்றும்
“நாலு வேதம் ஓதுவீர் ஞான பாதம் அறிகிலீர்”
என்றும்
“இட்ட குண்டம் ஏதடா இருக்கு வேதம் ஏதடா”

என்றும் தமிழ் ஓங்கி அடித்துக் குரல் எழுப்பி இருக்கிறது. பிராமண எதிர்ப்பு என்பது மானிட மேம்பாட்டு ஆதிக்க எதிர்ப்பு சிந்தனையாகும். இச்சிந்தனையின் குரல் தமிழ் இலக்கியத்தில் முக்கியமாக சித்தர் பாடல்களில் பலமாகக் கேட்கிறது. “தமிழ் சித்தர்களின் நூல்களை முறையாகப் பதிப்பித்தால் இந்திய வரலாற்றை மறுநிர்மாணம் செய்யக் கூடிய வளமான சான்றாதாரங்களை நாம் அளிக்க இயலும்” என்று மாபெரும் சிந்தனையாளர் தேவிபிரசாத் சட்டாபாத்தாய கூறுவது பிராமணிய எதிர்ப்பை அவைகள் பலமாக வெளிப்படுத்துவதால்தான் என்பதை இங்கு சுட்டிக்காட்டல் தகும். இந்தப் பிராமணிய எதிர்ப்பு தமிழ் நாட்டில் பலமாகவேரூன்றி இருந்ததால்தான் பெரியார் இயக்கம் பெரு வெற்றியடைந்தது. அம்மரபு இல்லாத வேறு மாநிலங்களில் அவ்வாறான இயக்கங்கள் தோல்வியைத் தழுவிக் கொண்டன.

தமிழ் தனது நீண்ட பாரம்பரியத்தில் அரச ஆதரவுடன் இருந்த காலங்கள் மிகவும் குறைவு. 12 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் தமிழ் அரச ஆதரவு பெற்றிருக்கவில்லை என்று கூறப்படுகிறது. மேலோங்கிகளின் தொடர்பு மொழியாக இருந்த சமஸ்கிருதத்தின் கிடுக்குப்பிடிக்குள் தமிழ் சிக்கித் திணறியது. அதனை எப்படியாவது உருமாற்றிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் பிராமணர்கள் செயற்பட்டனர். முணிப்பிரவாள நடை நடையென்று சமஸ்கிருதத்தை அரைக்கரைவாசி கலந்து தமிழை எழுதி வந்தனர். வழிபாட்டு மொழியாக இருந்த தமிழை கருவறைக்கு வெளியே தள்ளி விட்டனர். தவிர்க்க முடியாமல் தமிழ் சமஸ்கிருதக் கூறுகளை உள்வாங்கினாலும் பிற்பாடு அவைகளை மெல்லமாக வெளியேற்றி விட முனைகிறது. அல்லது தன் இயல்புக்கு ஏற்ப தன்வயப்படுத்தி விடுகிறது சில பத்தாண்டுகளுக்கு முன்னர் சமஸ்கிருதத்தின் மறுவடிவமான இந்தியை தமிழ் நாட்டுக்குள் புகுத்த இந்திய ஆட்சியாளர்கள் எடுத்த முயற்சிகள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகின இதனால் தமிழ் மீதும் தமிழர் மீதும் ஆழ்ந்த வெறுப்புக் கொண்டவர்களாகப் பிராமணர்கள் உள்ளனர். இதனை இந்து ராம், சோ, சுப்பிரமணிய சுவாமி போன்றவர்கள் அவ்வப்போது உதிர்க்கும் கருத்துக்கள் காட்டுகின்றன.

“அகில இந்தியா என்னும் கோழி முட்டை உடைந்து விடும் என்னும் இந்திய ஆட்சியாளர்களின் மனோபாவமும் சிங்கள இனவெறி நலனும் ஒரு புள்ளியில் இணைவதாலேயே ஈழத்தமிழர்களின் போராட்டம் வெற்றிபெற முடியாமல் போனது” என்கிறார் தமிழவன். ஈழத் தமிழர்களின் போராட்டம் தோல்வி அடைந்தாலும் பல நல் விளைவுகளை அது தமிழ் சமூகத்தின் மீது ஏற்படுத்தி விட்டுள்ளது. அது பல்வேறு பிரிவுத் தமிழர்களிடமும் ஓரின அடையாளத்தை தோற்றுவித்துள்ளது. இதன் வழி தமிழர்களின் மூலப்படிம உணர்வு என்றுமில்லாதவாறு இன்று கிளர்ந்தெழுந்துள்ளது. இதனால் ஈழத்தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள் வெல்லும் என்று நம்புகிறார் தமிழவன். தமிழர்கள் தமது மூலப்படிம உணர்வைத் தேடியெடுத்து அதனை உறுதியான ஒரு தத்துவ வடிவமாக வடிவமைத்துக் கொள்ள வேண்டும் என்று முன்வைக்கிறார் அவர்.

ஒரு இனத்தினரின் மொழியினரின் மூலப்படிம உணர்வை, பயனற்றது என்பதோடு அது ஆதிக்க மனநிலையின் பாற்பட்டது என்பதும் தமிழவனின் வாத மாகும். ஐரோப்பியர்கள் செவ்விந்தியர்களை அழித்த போதும் ஆபிரிக்கர்களை அடிமையாக்கிய போதும் இலத்தீன் அமெரிக்கர்களை அடக்கிய போதும் அவர்களின் மூலப்படிம உணர்வு கிளர்ந்தெழாததால் அவர்கள் தோற்றுப்போனர்கள் என்று தமிழவன் கூறுகிறார்.

இந்த இடத்தில் துருக்கி மொழியில் நிகழ்ந்த மறுமலர்ச்சியை எடுத்துக்காட்ட தமிழவன் தவறி விட்டார் எனலாம். துருக்கி மொழியும் மக்களும் இஸ்லாம் மதம் காரணமாக அரபு மொழி, பண்பாட்டுக்கு ஆற்பட்டிருந்தனர். இதனை அடென் டேக் தலைமையில் இயங்கிய துருக்கிய தேசியவாதிகள் விரும்பவில்லை அவர்கள் அரபு மொழிப் பணபாட்டிலிருந்து துருக்கியை மீட்டெடுக்க விரும்பினர். முதலில் மொழியைத் தூய்மைப்படுத்தும் செயற்பாடுகள் ஆரம்பமாகின. தமது மொழியில் இரண்டறக் கலந்துள்ள அரபுச் சொற்களை நீக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. ஆடடென் டேக் துருக்கி மொழிப் பேராசிரியர்களை கிராமங்களுக்கு அனுப்பி “புழுதி படிந்த” துருக்கி வழக்கு மொழிச் சொற்களை திரட்டினார். அவைகளை துருக்கி மொழியிலுள்ள அரபுச் சொற்களுக்குப் பதிலாக பொருத்தம் நோக்கி வழங்குமாறு கட்டளையிட்டார். அதே போல் அரபு எழுத்துக்களுக்குப் பதிலாகரோமன் எழுத்துகளைப் பயன்படுத்துமாறு பணித்தார். ஆரம்பத்தில் இது சிரமமாக இருந்தாலும் காலப்போக்கில மக்கள் பழகிக் கொண்டனர்.

இந்த வழியில் தமிழர்களும் சென்று தூய்மைப் படுத்திக் கொள்ளலாம் என்ற நான் நினைக்கிறேன். துருக்கி மொழியைவிட இந்த வாய்ப்பு தமிழுக்கு அதிகமாக உள்ளது. பல்வேறு வட்டார வழக்குகள் சமூக வழக்குகள் தமிழில் வழங்கி வருகின்றன. அவைகளைத் திரட்டி அந்நிய சொற்களுக்குப் பதிலாக பொருத்தமான இடத்தில் வழங்கலாம் முக்கியமாக தமிழி ஒலியமைப்புக்கு இசைவில்லாத சொற்களை முதலில் நீக்கிக் கொள்ளல் அவசியமானது. கலைச் சொற்கள் பற்றாக்குறையை நீக்குவதற்காக குறைவிலாத வளம் வட்டாரச் வழக்குகளில் உள்ளது என்பதை அறிஞர் உலகம் கவனிக்கத் தவறி உள்ளது. ஊதாரணத்திற்கு மட்டக்களப்பு பேச்சுவழக்கில் பயிலும் ஒரு சொல்லை எடுத்துக் காட்டுகிறேன். Electric fan என்பதை மின்விசிறி என்றே குறிப்பிடுகின்றனர். விசிறி என்பது அரைவட்டமாக அசையும் ஒன்றாகும். மட்டக்களப்பு பிரதேசங்களில் முழுவட்டமாகச் சுழலும் பொருளை ‘சூகை’ என்று சொல்வர். அந்தச்

(14 ஆம் பக்கம் பார்க்க....)

# தமிழர் தரப்பிடம் ஒற்றுமையும் இல்லை ஒருங்கிணைவும் இல்லை

**"தலைவர் சம்மந்தனோ கண்களை மூடிக் கொண்டு எல்லாம் நடக்க வேண்டிய நேரத்தில் நடக்கும். அதுவரை பொறுத்துக் கொள்ளுங்கள் என்றிருக்கிறார். சம்மந்தனுக்கு அடுத்த நிலையிலிருக்கும் மாவிட்டபுரம் சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன் போன்றோருக்கும் இதில் அக்கறையில்லை."**

**கருணாகரன்**

தேர்தல் ஆணைக்குழுவினால், தமிழ் முற்போக்குக் கூட்டணி ஒரு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. "Torch light" என்ற மின் சூள் சின்னம் கூட்டணியின் அதிகாரபூர்வ சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது. வாழ்த்துகள் இதற்கான கடிதத்தைத் தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா, தமிழ் முற்போக்கு கூட்டணியின் செயலாளர் சந்திரா சாப்டருக்கு அனுப்பி வைத்துள்ளார் என கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் உற்சாகம் பொங்கக் கூறுகிறார்.

இதைப்பற்றி தன்னுடைய முகப்புத்தகத்தில் பதிவிட்டதுடன் ஊடக அறிக்கை ஒன்றையும் விடுத்திருக்கிறார்.

இந்தத் தகவலும் நடவடிக்கையும் தமிழ் அரசியல் சூழலில் முக்கியமான ஒன்றாகும்.

ஏனென்றால், இருபது ஆண்டுகளைக் கடந்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்னும் அரசியற் கட்சியாக முறைப்படி தேர்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்படவுமில்லை. அங்கீகரிக்கப்படவுமில்லை.

அதைப் பதிவு செய்யக் கோரி,



கூட்டமைப்பிலுள்ள பலரும் தொடர்ந்து கோரி வந்தனர். மக்களுடைய எதிர்பார்ப்பும் அவ்வாறே உள்ளது. இந்தப் பதிவுக் கோரிக்கையைப் புறந்தள்ளி வருவதைக் கண்டித்தே சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ் கூட்டமைப்பிலிருந்து விலகியது. இதைக்குறித்து ரெலோவும் புளொட்டும் அழாக்குறையாகக் கெஞ்சிக் கொண்டேயிருக்கின்றன.

தலைவர் சம்மந்தனோ கண்களை மூடிக் கொண்டு எல்லாம் நடக்க வேண்டிய நேரத்தில் நடக்கும். அதுவரை பொறுத்துக் கொள்ளுங்கள் என்றிருக்கிறார். சம்மந்தனுக்கு அடுத்த நிலையிலிருக்கும் மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன் போன்றோருக்கும் இதில் அக்கறையில்லை.

ஆனால், 2015 ஜூன் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணி இன்று (01.12.2021) பதிவு செய்யப்பட்டு விட்டது. ஆறு ஆண்டுகளுக்குள் அவர்கள் செய்ய வேண்டியதைச் செய்துள்ளனர். மக்களுக்குக்கு எது தேவையோ அதைச் செய்திருக்கிறார்கள். மக்கள் ஒற்றுமையை விரும்புகிறார்கள் என்றால், அந்த விருப்பத்துக்கு அடையாளமாகியிருக்கிறார்கள்.

இதுதான் மக்கள் அரசியலின் அடையாளமாகும்.

இதைப்பற்றி தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரான மனோ கணேசனே சொல்கிறார், "2015 ஜூன் 3 ஆம் திகதி கொழும்பில் ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி, மலையக மக்கள் முன்னணி ஆகிய மூன்று கட்சிகளின் தலைவர்களால் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. அன்று ஆரம்பிக்கப்பட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணி இன்று ஆறு ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட கட்சியாக மாறியுள்ளது. இது அதனுடைய அடுத்த கட்ட வளர்ச்சியாகும்.

"எமது மக்களின் மன உணர்வுக்கு உயிர் கொடுத்து முழு நாட்டுக்கும் முன்மாதிரியாக இன்று நிற்கிறது முற்போக்குக் கூட்டணி. ஒற்றுமை நிலைக்க வேண்டும் என எதிர்பார்த்த பெருந்திரள் மக்கள் மத்தியில், இது "தேர்தல் வரையிலான உறவு" அல்ல. அதற்கும் அப்பாலான அடிப்படைகளைக் கொண்டது. "தேர்தல்கள் முடிந்த பின் உடைந்து விடும், உடைய வேண்டும்" என்று எதிர்பார்த்தவர்களுக்கெல்லாம் பதிலாக நாம் புத்தெழுச்சியுடன் நிற்கிறோம். ஒற்றுமையை வலுப்படுத்தியிருக்கிறோம் என்று நிரூபித்திருக்கிறோம்.

கட்சிகள் "ஒன்றுசேர வேண்டும், ஒன்றுசேர வேண்டும்" எனப் பல தரப்பாலும் கோரிக்கை விடுக்கப்படுகிறது. நாம் அதை சாத்தியப்படுத்திக் காட்டியிருக்கிறோம். ஒன்றுபட்டு நின்று, பல சவால்களுக்கு மத்தியில் ஆறு ஆண்டுகளைக் கடந்து புதிய ஒரு நிலையை எட்டியிருக்கிறோம். இந்தக் காலத்தில் எம்மை விட்டுப் பிரிந்தவர்களுக்கு துயருடன் விடை கொடுத்தோம். பதிலுக்குப் புதியவர்களை உள்வாங்கினோம்" என.

இந்தச் சந்தர்ப்பத்தில் சக பயணிகளையும் முன்னாள் நண்பர்களையும் உருக்கத்துடன் நோக்குகிறார் மனோ. இது உயரிய பண்பாகும்.

ஒரு அரசியல் இயக்கம் வேறு எப்படி இருக்க முடியும்?

இதற்கிடையில் இரண்டு பாராளுமன்ற தேர்தல்கள், ஒரு ஜனாதிபதி தேர்தல், ஒரு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஆகியவற்றை தமிழ் முற்போக்குக் கூட்டணி சந்தித்துள்ளது. இந்தத் தேர்தல்களை அது இணைந்த நிலையில் தமிழ் முற்போக்குக் கூட்டணியாகவே எதிர்கொண்டது. அதேவேளை இதிலுள்ள மூன்று கட்சிகளும் தனித்தனியான தலைமைத்துவத்தையும் கட்டமைப்பையும் கொண்டவை. ஆனால் தேசிய அரசியலை எதிர்கொள்வதற்கு தமது தனியான அடையாளம் உதவாது, போதாது என்ற நிலையில்தான் இவை தனித்துவமாக தமிழ் முற்போக்குக் கூட்டணியாக, ஓரணியில் நிற்கின்றன.

இதன் மூலம் இப்பொழுது தமிழ் முற்போக்குக் கூட்டணி தேசிய அரங்கில் தவிர்க்க முடியாத ஒரு அரசியல் இயக்கமாக வளர்ந்துள்ளது. இந்தக் கூட்டணி தொடர்பாக மலையகத்திலும் பிற இடங்களிலும் பல்வேறு விமர்சனங்கள் உண்டுதான். ஆனால், அவை ஒரு புறமிருக்க, கூட்டாகச் செயற்படும் அப்படையில் தமிழ் முற்போக்குக் கூட்டணி இன்று முன்மாதிரிச் சக்தியாகியுள்ளதை யாரும் மறுதலிக்க முடியாது.

இதேவேளை தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளும் தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளும் ஒன்றுசேர வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது. இதற்கேற்ப முஸ்லிம் கட்சிகளிடத்திலும் பல விடயங்களில் ஒருங்கிணைந்த முன்மாதிரிகள் உருவாகி வருகின்றன. காலச் சூழல் அவ்வாறு அவற்றை நிர்ப்பந்திக்கின்றன என்பதை மறுதலிக்க முடியாது. குறிப்பாக ஏப்ரல் தேவாலயத் தாக்குதலுக்குப் பின்னர் இலங்கையில் உருவாகியிருக்கும் முஸ்லிம் எதிர்ப்பு நிலையின் நெருக்கடிகள் முஸ் லிம்களை அரசியல் ரீதியாகப் புதிதாகச் சிந்திக்கத் தூண்டியுள்ளன. அதன் ஒரு விளைவாகவே முஸ்லிம் கட்சிகளின் இந்தக் கூட்டுப் பரிமாணம். இதற்கும் ஒரு முக்கிய காரணம் உண்டு. இப்பொழுது முஸ்லிம்கள் அரசுக்கு எதிர்நிலையில் நிறுத்தப் பட்டுள்ளனர். முன்பு போலப் பங்காளிகள் இல்லை. இதுவும் ஒரு புதிய அரசியற் பரிமாணத்துக்கான அடிப்படையே.



இந்தச் சூழலில் முற்போக்குக் கூட்டணி இன்று பெற்றிருக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் பதிவு பல கோணங்களில் பார்க்கப்பட வேண்டியது. எதிர்காலத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியைப் போல முஸ்லிம் தரப்புகளும் தமிழ்த்தரப்புகளும் பொது அடையாளத்தின் கீழ், பொதுச் சின்னத்தின் கீழ் அணிவகுக்கலாம். அதற்கான சாத்தியங்களை புறச்சூழலும் அகச் சூழலும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றன.



அதற்கு இந்தச் சக்திகள் தயாராகும் என்றே தெரிகிறது. அதற்கொரு முன்னுதாரணமே தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பதிவும் தனிச்சின்னமுமாகும்.

அடுத்தது தமிழ்க் கட்சிகளைப் பற்றியது. அவற்றின் ஒற்றுமை, ஒருங்கிணைவு தொடர்பானது. ஏனெனில் முஸ்லிம்கள் சந்திப்பதைப்போல மக்களும் ஏராளம் நெருக்கடிகளை தொடர்ந்து சந்தித்துக் கொண்டேயிருக்கிறார்கள். முந்திய நெருக்கடிகளை விட இப்பொழுது புதிய நெருக்கடிகள் வேறு வந்துள்ளன. படைகளுக்கான காணி சுவீகரிப்புத் தொடக்கம் மகாவலித்திட்ட விரிவாக்கம், தொல்பொருள் மையங்கள் வழியாக நில ஆக்கிரமிப்பு, தொடரும் கைதுகள், ஊடக சுதந்திர மறுப்பு எனப் பலவாக.

இதை விட நினைவு கூரலுக்கான தடை, காணாமல்போனோர் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை என முந்திய தீராக் கணக்குகளும் உண்டு.

இருந்தாலும் தமிழ்த் தரப்புகளிடம் ஒற்றுமை

**(15 ஆம் பக்கம் பார்க்க)**

# டும் டும் டும்...

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

> **“மன்னர்களின் விசித்திரமான கனவுகளால் உலகில் போர்கள் உருவாகியிருக்கின்றன. பல கோடி மக்கள் செத்து மாண்டிருக்கிறார்கள். சில மன்னர்களால் மக்கள் பைத்தியக்காரர்களாகியிருக்கிறார்கள். மன்னிக்கவும் பைத்தியக்காரர்களாக்கப்பட்டிருக்கிறார்கள். சிலருடைய ஆட்சியில் தற்கொலைகள் அதிமாகியிருக்கின்றன.”**

மறுபடியும் பூதம் கிளம்பியுள்ளதைப்போல பால்மாக்களின் விலை அதிகரிக்கப் போகிறது. ஏனென்றால் இப்பொழுது (02.12.2021) எந்தக் கடையிலும் பால்மா இல்லை. பொருளொன்றுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறது என்றால் நிச்சயமாக நம்பலாம், அடுத்த சில நாட்களில் விலை உயரப்போகிறது என்று.

ஆகவே அடுத்த சில தினங்களில் புதிய விலைப் பட்டியல் வரும்.

“பால்மா இருக்கிறதா?” என்று கேட்டால் உதட்டைப் பிதுக்கிக் கையை விரிக்கிறார்கள். “காரணம் என்ன?” என்றால், மேலே கையைக் காட்டுகிறார்கள். கடவுளைக் காட்டுகிறார்களா? கடவுளுக்கும் மேலானவரைக் காட்டுகிறாரா? என்று தெரியவில்லை.

இந்தச் சிற்றிவேஷனில் ஒரு நண்பர் கேட்கிறார், “ஜனாதிபதி கோட்ட பாய பதவியேற்ற தொடக்கத்தில் அரிசிக்கடை, ஆஸ்பத்திரி, அரச கந்தோர்கள் என்றெல்லாம் அதிரடிப் பயணம் செய்ததைப் போல இப்பொழுது சனங்களின் வீடுகளுக்கு ஒரு தடவை போனால் என்ன?” என்று.

இந்தக் கேள்வியோடு பக்கத்திலிருந்தவர் இதற்கும் தனக்கும் சம்மந்தமில்லை என்று எழுந்து போய் விட்டார். தனக்குச் “சில நாட்களாக காது கேட்பது கொஞ்சம் குறைவாக இருக்கு” என்றும் சொல்லிக்கொண்டு போனார்.

“நமக்கெதுக்கப்பா இந்தப் பொல்லாப்பெல்லாம்?” என்று கையைக் காட்டுகிறார் மற்றவர்.

எல்லோருக்கும் மனதுக்குள்ளே அலைகள் அடித்துக் கொண்டிருக்கின்றன. கடல் கொந்தளிக்கிறது. எரிமலைகள் வெடிக்கின்றன. ஆனால் எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டு அமைதியாக இருக்கிறார்கள்.

தங்களுக்கும் ஒரு காலம் வரத்தானே வேணும். அப்பொழுது காட்டுகிறோம் தாங்கள் யார் என்று கறுவிக் கொள்கிறார்கள்.

“இருக்காதே பின்னே, மீட்பர் என்று வந்த ஆள், தாழ்ப்பராக மாறினால் யாருக்குத்தான் கொதிக்காது?”

“நல் மாற்றங்கள் நிகழும் என்று நம்பித்தானே இந்தப் பெரும்பான்மையை வழங்கினோம். வேலிக்கு வைத்த முள் காலில் குத்துகிறதே” என்று சிங்கள மக்கள் அழுது வடிகிறார்கள்.

“என்ன செய்வது நம்பிக்கைத் துரோகத்தை ‘இவர்கள்’ மட்டும்தான் செய்கிறார்களா? என்று ஆறுதலடைய வேண்டியதுதான் ” என்று சொன்ன ஓட்டோக்காரை எரித்து விடுவதைப்போலப் பார்க்கிறார் ஒரு வயதான மூதாட்டி. “உனக்கென்ன பைத்தியம் கியித்தியம் பிடித்துப் போச்சுதா?” என்று கேட்பதைப்போலிருந்தது அவருடைய பார்வை.

“கடைசியில் அடுப்படிக்கே பாதுகாப்பில்லை. தேசிய பாதுகாப்பின் விசித்திரம் இந்தளவுக்கு வந்துள்ளது” என்று பகடி விடுகிறார் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார.

இப்படி எல்லோரும் பகிடி விடுகிற அளவுக்குத்தான் உள்ளது மேன்மை தங்கியவரின் ஆட்சி.

போரின் குண்டுகள் வெடிக்கவில்லைத்தான். பதிலாக இப்பொழுது சமையலறைக் காஸ்கள் வெடிக்கின்றனவே. இதற்கொரு ஆய்வுக்குழுவை நியமித்திருக்கிறது அரசாங்கம். அந்தக் குழுவில் விசேட நிபுணர்களாகப் பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் எல்லாம் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பது ஒரு த்ரிலிங் நியூஸாகக் காத்துக் கொண்டிருக்கிறது.

ஆய்வு முடிவுகள் என்னவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும். சிலிண்டர்கள் வெடிக்குமா, வெடிக்காதா?

இதற்கான பதிலே சனங்களுக்குத் தேவை.

ஏனையதெல்லாம் ஊழல் பெருகிய நாட்டில் விசயமே இல்லை. ஆனால், வெடி சாதாரணமானதில்லையே.

அதுவும் போர் முடிந்து இனிக் கொஞ்சம் நிம்மதியாக வாழலாம் என்றால், இப்படிக் குசினிக்குள்ளேயே குண்டு என்றால் யாருக்குத்தான் கலக்கம் வராது?

அதனால் சனங்கள் கதி கலங்கிப் போயிருக்கிறார்கள்.

சமைக்கவும் முடியாது. சமைக்காமலிருக்கவும் முடியாது என்ற நிலை.

சமையலுக்குப் பொருட்கள் இருந்தாலும் நிம்மதியாக அதைச் சமைத்துச் சாப்பிட வழியில்லையே என்று வெடிக்கிறார்கள்.

எப்படியோ எல்லோரையும் வெடி கதிகலக்கிக் கொண்டிருக்கிறது.

போரின் வெடிகளை ஒழித்துக் கட்டிய ஹீரோவுக்கு இந்த வெடிகளைக் கட்டுப்பாட்டிற் கொண்டு வருவதற்குப் பதில் இல்லை.

பாவம் அவர்தான் என்ன செய்ய முடியும்?

ஏதோ நினைக்க ஏதோ நடக்கிறதே. பசுமைப் புரட்சியை உருவாக்கலாம் என்றால் பசளைக்குக் கதியில்லை என்று நகர் நகராகப் போராட்டம் செய்கிறார்கள் விவசாயிகள்.

விவசாயிகளை எதிர்க்கட்சிகள்தான் தூண்டி விடுகின்றன என்று சொன்னால் யாருமே இதை நம்ப மாட்டோம் என்கிறார்கள். மக்கள் எழுச்சியை திசை திருப்புவதற்காக நீங்கள்தான் பொய் சொல்லுகிறீர்கள் என்கிறார்கள் விவசாயிகள்.

பால்மா தட்டுப்பாடு, பாலுக்கு விலை உயர்வு என்று சொல்வதெல்லாவற்றுக்கும் பின்னால் ஏதோ ஒரு காரியம் உள்ளது என்றே படுகிறது.




மாடு வளர்ப்பை மறைமுகமாக அரசு ஊக்கப்படுத்துவதற்குத்தான் இந்தத் தட்டுப்பாடுகளோ?

மாடு வளர்ப்பை ஊக்கப்படுத்தினால் பால் கிடைக்கும். அதோடு பசளைப் பிரச்சினையும் தீரும்.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் -

கூடவே இயற்கையிலிருந்தே எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளலாம்.

இப்படித்தான் லிற்றோ காஸ் வெடிப்பைக் காட்டி விறகு அடுப்புக்கு மக்களைத் திருப்பி விடலாம்.

இலங்கை மெல்ல மெல்ல உலக அரங்கில் ஆச்சரியம் மிக்க நாடாக வந்து விடுமல்லவா.

ஆம் ஆசியாவின் ஆச்சரியம்?

அண்ணன் இந்த ஆசியாவின் ஆச்சரியத்தைப் பற்றிச் சொன்னார், கனவு கண்டார். அதைத் தம்பி நியமாக்குகிறார்.

மன்னர்களின் விசித்திரமான கனவுகளால் உலகில் போர்கள் உருவாகியிருக்கின்றன. பல கோடி மக்கள் செத்து மாண்டிருக்கிறார்கள். சில மன்னர்களால் மக்கள் பைத்தியக்காரர்களாகியிருக்கிறார்கள். மன்னிக்கவும் பைத்தியக்காரர்களாக்கப்பட்டிருக்கிறார்கள். சிலருடைய ஆட்சியில் தற்கொலைகள் அதிமாகியிருக்கின்றன.




இப்பொழுது நீங்கள் எப்படி ஆக்கப்படுகிறீர்கள் என்பது உங்களுக்கே வெளிச்சம்.

இந்த வெளிச்சத்தில் நீங்கள் உருப்பட்டால் சரி.

அல்லது இன்றைய இந்தக் கொதிப்பில் இன்னொரு பைத்தியக்காரத்தனமான முடிவை எடுத்து விடாதீர்கள்.

முன்பு ஒருவர் மேன்மை தங்கிய இடத்தில் இருந்தார்.

அவரைப் பலரும் பைத்தியக்காரத்தனங்களின் தந்தை என்றனர். அதற்குப் பதிலாகப் புதிய தலைவரைத் தெரிந்தனர்.

புதியவரே முந்தியவரை மிஞ்சிச்செல்கிறார்.

இதெல்லாம் எதிர்காலத்துக்கான. எச்சரிக்கை. நல் வழிகாட்டி. ஒளியூட்டியாகும்.

வரலாற்றிலிருந்து நாம் பாடங்களைப் படிக்கத்தான் வேணும். நம்முடைய கைகளில் சூடு இன்னும் படத்தான் வேணும். ■



> பிரித்தானியாவைச் சேர்ந்த விஞ்ஞானி ஸ்ரீபன்ஹவாக்கிங் சில ஆண்டுகளுக்கு முன்னர் காலமானார். அவர் இயற்கை எய்த முன்பாக “ மனிதன் தனது நட வடிக்கைகளால் பூமியின் சமநிலை யைச் சீரழிக்கிறான். இதனால் பூமி இன்னமும் 100 வருடங்களில் மனித இனம் வசிக்க முடியாத கிரகமாகப் போகப் போகின்றது.

# இல்லைவெளி...

**வேதநாயகம் தபேந்திரன்**

“வல்லைவெளி இல்லைவெளி என்றாகி விடுமா ?” வல்லைவெளியைக் கடக்கும் போதெல்லாம் அண்மைக் காலமாக என் மனதில் விழும் சொற்கள் இவை.

இயற்கை அன்னை எம்மைக் காப்பதற்கான அரணாகப் பல வளங்களைத் தந்து நிற்கின்றாள். நாம் தான் இலாபத்திற்காகத் தாயைக் கொன்ற தனயர் களாக, புதல்விகளாக நிற்கின்றோம்.

அத்தகைய அரும் கொடைகளில் ஒன்றுதான் யாழ்ப்பாணக் குடாநாடு எனும் நிலப் பரப்பின் ஐந்து பெரும் கூறுகளில் அடங்கும் வடமராட்சி எனும் நிலப் பரப்பையும் வலிகாமம் எனும் நிலப் பரப்பை யும் பிரிக்கும் வல்லைவெளி.

வயல் வெளிகளைக் கொண்ட மிகப் பெரிய வெளி என்பதாலேயே வல்லை வெளி எனப் பெயர் வந்தது என்பதே வரலாறு.

நாடு பிடித்த மனிதன் பின்னர் நகரம் பிடித்தான். கிராமம் பிடித்தான். காடு பிடித்தான். இப்போது வெளிகளையும் பிடிக்கிறான்.

வல்லைவெளியும் பறிபோகும் ஒரு நிலப்பரப்பா? என்ற கேள்வி எழுகின்றது. தெய்வத்தின் பெயரால் இயற்கையின் கொடையாகிய வல்லைவெளியின் சிறுதுண்டு பறிபோயுள்ளது. இதற்கான சட்ட ஆசீர்வாதங்களை யார் கொடுத்தார்களோ? யாம் அறியோம் பராபரமே.

இதைப் பார்க்கும் போதுதான் யாழ் நகரின் பழைய பூங்கா எனக்கு ஞாபகம் வருகின்றது. என் சிறுவயதில் என் அன்னை மண்ணில் நண்பர்களுடன் மதில் பாய்ந்து மாங்காய் பிடுங்கி மதிலில் குற்றி உண்டு கழித்த இனிய நாள்கள் எனக்கு ஞாபகம் வருகின்றது. இப்போது பழைய பூங்கா வீதி என்ற பெயர் மட்டுமே எஞ்சியுள்ளது.

பிரித்தானியர் ஆட்சியில் யாழ்நகரின் இயற்கைச் சமநிலையைப் பாதுகாக்கவும் உயிரோட்டமான உயிர்ச் சுவாசத்தை ஏற்படுத்தவுமென அமைத்த தாவரவியல் பூங்காதான் பின்னாளில் பழைய பூங்கா என ஆகியது.

மக்கள் தொகை பெருக நிர்வாகத் தேவைக்கெனக் கட்டிடங்கள் அமைக்கப்பட்ட போது பழைய பூங்கா வில் நூற்றாண்டு நினைவு கொண்ட மரங்கள் நிறைய அரிவாளுக்கு இரையாகி உயிர் மூச்சை விட்டன.

மரக் காடுகள் கொங்கிறீற் கட்டிடக் காடுகள் ஆகி விட்டன.

அது போன்றதொரு நிலைமை வல்லைவெளிக்கும் வரப் போகின்றதெனக் கட்டியம் கூறும் நிகழ்வின் ஆரம்பத்தில் நிற்கின்றோம். யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதிக்கு அருகில் உள்ள நிலப் பெறுமதி உள்ள பிரதேசம், நிலப் பிடிப்பில் அகப்பட்டு காலப் போக்கில் வல்லைவெளி காணாமல் போகப் போகின்றது என்பது மட்டும் புரிகின்றது.

அரச நிர்வாகக் கட்டமைப்புகள் இயற்கையைப் பாதுகாப்பதற்கு எத்துணை தூரம் உயிர் மூச்சுடன் இயங்குகின்றன என்பது கேள்விக்குரியது.

சமூக நோக்குள்ள ஆர்வலர்கள் கல்வி மான்கள் இவை தொடர்பான அக்கறையை எத்துணை தூரம் காட்டுவார்கள் என்பதும் கேள்விக்குரியது.

பிரித்தானியாவைச் சேர்ந்த விஞ்ஞானி ஸ்ரீபன் ஹவாக்கிங் சில ஆண்டுகளுக்கு முன்னர் காலமானார். அவர் இயற்கை எய்த முன்பாக “ மனிதன் தனது நடவடிக்கைகளால் பூமியின் சமநிலையைச் சீரழிக் கிறான். இதனால் பூமி இன்னமும் 100 வருடங்களில் மனித இனம் வசிக்க முடியாத கிரகமாகப் போகப் போகின்றது”

என்றார். அந்தக் கூற்று உண்மை என்பது போல மனித நடத்தைகள் உள்ளன.

வந்த பின்பு நொந்து ஒரு பயனும் இல்லை. வருமுன் காப்பதே நன்று. இயற்கை அன்னை பூமியின் 5 கண்டத்து மனிதர்களும் வாழக் கூடியதாக நிலங்களை வளங்களைத் தந்துள்ளாள். எமக்கு நன்மை வருகிறது என்பதற்காக அதனை அழிக்க அல்லது வசப்படுத்த உரிமை இல்லை.

யாழ்ப்பாண நகரிலிருந்து கண்டி வீதி ஊடாக நாவற்குழி நோக்கிச் செல்லும் போது கிழக்கு அரியாலை திரும்பும் பாதைக்கு எதிரே உள்ள களப்புகளைக் காண்கின்றோம். அந்தக் களப்பின் ஒரு பகுதியில் அண்மைக் காலத்தில் வீடுகள் கட்டப்பட்டுள்ளது. தற்போது தனியார் கைத்தொழில் நிறுவனங்களும் அமைக்கப்பட ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்திலிருந்து நாவற்குழி வரையிலான களப்புகளும் கடல் நீரேரிகளும் இயற்கையின் சமநிலையைப் பேணுவதில் பெரும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. குறிப்பாக இங்குள்ள கண்டல் காடுகள் மூலமாக நண்டு, இறால் போன்ற கடல் உணவு உயிரினங்கள் வளர்கின்றன. அவை மனிதனுக்கு உணவாகப் பயன்படுகின்றன.

இயற்கையின் சமநிலையைப் பேணுவதுடன் மனிதர்களுக்கு உணவு வழங்கக் கூடிய களப்புகளைப் பாதுகாக்க வேண்டிய பணியில் தவறுகின்றோம்.

இயற்கையை நாம் அழித்தால் இயற்கையால் நாம் அழிவோம் என்ற ஒற்றைச் சொல்லை யூன் 05 இல் சர்வதேச சுற்றுச் சூழல் பாதுகாப்புத் தினத்தன்று சொல்லிவிட்டு மிகுதி எல்லாவற்றையுமே மறந்து போய் விடுகின்றோம்.

எமது நாட்டில் ஒரு கட்டிடமொன்று கட்டுவதாயின் கட்டிட அனுமதி பெறப்படல் வேண்டும். அனுமதி பெற்ற பின்புதான் கட்டிடமொன்று கட்டலாமெனச் சட்டம் தெளிவாகச் சொல்கிறது.

முதலில் மாநகர சபை அல்லது நகர சபை அல்லது பிரதேச சபை இதில் விண்ணப்பதாரியின் சபை எதுவோ அங்கு அனுமதிக்கான படிவம்,காணி உறுதி யின் பிரதி, நிலஅளவையாளர் வரைபடம் கொடுக்க வேண்டும். அத்துடன் நகர அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை அல்லது வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

தொழிற்சாலை ஆயின் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதி பெறுவதற்காகப் பல ஆயிரம் ரூபா கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

ஆனால் இவை யாவுமே இல்லாமல் எமது இயற் கைச் சூழலை அழிக்கும் வகையில் எப்படிக் கட்டி டங்கள் அமைக்கப்படுகின்றதோ தெரியவில்லை.

“ தத்துவங்கள் எல்லாமே சரி தான். நடைமுறை தான் ஒத்துவரவில்லை. ஒன்றாக்க முடியவில்லை” என்ற கவிதை வரிகள் தான் அடிக்கடி ஞாபகத்திற்கு வருகின்றது.

வல்லைவெளி இல்லைவெளி என்றாகுவது தடுக்கப்படுமா ?

■





# நிலைக்கண்ணாடி

தரிசனன்




## முதுமை எதிர்கொள்ளும் நெருக்கடிகளும் முதியோருக்கான தற்காப்பு முறைகளும்

முதுமை என்பது எவராலும் தவிர்த்துக் கொள்ள முடியாத இயற்கையான ஒரு முதன்மைப் பருவமே என்பதை யாவரும் அறிவோம். எனினும் முதுமைப் பருவத்தை எதிர் கொள்கின்ற பலரும் அந்நிலை நேர்ந்து விட்டமைக்காக உள்ளுள் வருந்தித் துயருறுவதைத் தற்காலத்தில் அதிகமதிகமாகக் காண முடிகிறது. மிகப் பல முதியவர்கள் நம்மால் முன்னைப் போல சுறுசுறுப்பாக இயங்க முடியவில்லை என்றும் பலவழிகளிலும் இயலாமை தம்மைப் பற்றிக் கொண்டிருப்பதாகவும் எண்ணியும் சொல்லியும் கவலைக் கொள்ளக் காண்கிறோம்.

முதுமை நிலையை அடைந்து விடுகின்ற போது இயல்பில் வழமையான உடல் வலிமை முன்போல இல்லாமலாகிப் போவது இயற்கையான ஒரு மாறுதல் தான் என்பதை முதலில் ஒத்துக் கொள்ள வேண்டும். சிறுவயது முதலே சுறுசுறுப்புடனும் வலிமையுடனும் இயங்கிப் பழகியவர் இயலாமையும் தளர்ச்சியும் ஏற்படுவது இயல்பானது. நோய்த் தாக்கங்களும் தோன்றுவது இயற்கையானதுதான். இந்த இயல்பான தன்மையினைப் புரிந்து கொண்டு ஏற்றுக் கொள்ளும் மனோ நிலைதான் அவசியமாக வயோதிபர்களிடம் இருக்க வேண்டும்.

சாதாரணமாக இயல்பாக நேரிடத்தக்க ஒரு சம்பவத்தையோ மாற்றத்தையோ ஏற்றுக் கொள்ளத் தக்க மனோநிலை யாவர்க்கும் தேவைப்படும் ஒரு பண்பாகும். வாழ்க்கையில் எத்தனையோ துயரம் தோன்றி மாறுவது இயல்புதான். அதற்காக எனக்கு மட்டும் ஏன் இந்த வாழ்க்கை விதிக்கப்பட்டடுது என்று கவலை கொண்டு மனம் உடைவது பொருத்தமற்றது.

முதியோர்க்கு நேரிடுகின்ற இன்னொரு துர்பாக்கிய நிலை, எல்லாவற்றுக்குமே அடுத்த வரை எதிர்பார்க்கவோ நாடவோ வேண்டியிருக்கின்ற நிலைமையாகும் இங்கு எதிர்பார்க்கப்படுபவர்கள் நிலைமையைப் புரிந்து கொண்டு பொறுமையுடனும் பரிவுடனும் உதவ முன்வருவார்களெனில் மகிழ்ச்சிதான். மாறாக எதிர் பார்ப்புக்குரியோர் இரக்கமின்றியும் புரிதலின்றியும் முதியோரைப் புறக்கணிக்கவும் வெறுத்தொதுக்கவும் நேரிடுகின்ற நிலை துயரமானதுதான்.

அவ்வாறு புறக்கணிப்பையும் வெறுப்பையும் எதிர் கொள்ள நேரிடும் முதியோர். இரக்கத்திலும் கவலையிலும் மனமுடைய நேரிடுவது இன்றைய சூழலில் பரவலாகக் காணப்படக் கூடிய ஒரு நிலைமையின் இத்தகைய நிலைமைக்குப்பின் முதியோர் மனமுடைந்து விரக்தியின் விளிம்புக்கு தள்ளப்படுவது பெருந்துயரமாகிறது. அத்தகைய விரக்தி ஏற்படுவது ஆபத்தானது இந்நிலையில்தான் முதியவர்கள் மனச்சிதைவுக்கு உள்ளாகி தற்கொலை செய்து கொள்வதற்கான எத்தனங்களை மேற் கொள்கின்றார்கள். இது சமூகத்தின் வீழ்ச்சியாகும்.

இத்தகைய மனவுடைவு நேர்ந்து விடாமல் நிலைமைகளைப் புரிந்து கொண்டு வாழ்க்கையை கொண்டு நடத்த முயன்றவர்கள் உறுதியானவர்கள் எது நேரிட்டாலும் எனக்கென்று விதிக்கப்பட்ட வாழ்க்கையை எப்படியாவது வாழ்ந்து முடிப்பேன் என கூறுவதாக இருக்கும் முதியோர் அடுத்தவர்க்கும் தெளிவை வழங்குகிறார்கள். முகம் கொடுக்க முடியாத துயரமும் சோதனையும் பலருக்கும் தோன்றுவது நாம் காலங்காலமாய் பார்த்து வருகின்ற ஒரு நிலைமைதான் காலம் எமக்கு இப்படி ஒரு வாழ்க்கையைத் தருவதற்குத் தீர்மானித்துள்ளதெனில் அதை ஏற்றுக் கொண்டு வாழ முனைவதுதான் நியாயமான கடமை. வாழ்க்கையில் தோற்றுப் போனோம் எனக் கவலையில் மூழ்குபவர்களைக் கால வெள்ளம் அள்ளிப் போகக் கண்டாலன்றி வேறெந்த அற்புதத்தையும் யாரும் எதிர் பார்க்க முடியாது. நமக்கு வழங்கப்பட்ட வாழ்க் கையை எவ்வாறேனும் வாழ்ந்து முடிப்பதே நாம் அறிவுடன் சொல்லக் கூடிய காரியமாகும். ■

# மக்களின் காணிகளை குறிவைக்கும் இராணுவம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகள் எதனை வெளிப்படுத்துகின்றன என்று சிந்திக்க வேண்டியுள்ளது. மக்களுடைய காணிகளை கையகப்படுத்துவதற்குரிய முயற்சியாக இதனை ஒருபுறம் நோக்கினாலும் தமிழ் மக்கள் மீதான அத்துமீறிய அதிகாரத்தினை பிரயோகிப்பதாகவே அதிகம் நோக்க வேண்டியுள்ளது. ஆழும் அரசின் மனநிலை என்னவாக இருக்கின்றதோ அதே மனநிலைதான் அவர்களின் அதிகாரத்தின் கீழ் சேவை செய்யும் இராணுவம் மற்றும் பொலிஸ்தரப்பினரிடமும் இருக்க முடியும் என்பது வெளிப்படையான தொன்றுதான். அதனை ஆதாரப்படுத்தும் செயற்பாடுகளில் ஒன்றுதான் அத்துமீறிய காணிப்பறிப்புச் செயற்பாடு.

இன்றைக்கு ஏறத்தாள முப்பது வருடங்களுக்கு மேலாக இராணுவத்தினர் பொதுமக்களின் காணிகள், வீடுகள், விவசாய நிலங்கள் என கையகப்படுத்தி வைத்திருக்கின்றனர். காணி உரிமையாளர்கள் வடக்குக் கிழக்குப் பகுதியில் வசிக்கின்ற போதும் அவர்களின் காணிகளை மீளக் கொடுப்பதற்கான எந்த முயற்சியும் அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இத்தனை ஆண்டுகாலமாக உரிமையாளர்களுக்கு வாடகை கொடுப்பது பற்றிய சிந்தனையும் அவர்களுக்குத் துளி கூட இல்லை. வெறுமனே தமது அத்துமீறிய அதிகாரத்தினைத் தமிழ் மக்கள் மீது திணித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்கின்ற மனோநிலை மட்டும் அவர்களிடம் இருக்கின்றது என்பது தெளிவு.

இன்றைக்கு ஏறத்தாள முப்பது வருடமாக வலிகிழக்கு மக்கள் தமது காணிகளை மீள இராணுவத்தினரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளும் ஆதங்கங்களும் சொல்லி மாளாது. தமது வாழ்நாட்களில் ஒருநாளாவது தமது மண்ணில் படுத்து உறங்க மாட்டோமா என்று ஏங்கிக் கொண்டிருக்கும் மக்களுக்கு எத்தகைய நீதியையும் இராணுவத்தினர் வழங்குவதாக இல்லை. இதற்கான தீர்வினை ஏறத்தாள யுத்தம் முடிந்து பன்னிரண்டு ஆண்டுகளாக அரசாங்கத்தினர் முன்கொண்டுவரவும் இல்லை. அவர்களைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் என்பவர்கள் தமது அதிகாரத்திற்கு உட்பட்டவர்கள். தாம் என்ன நினைக்கின்றோமோ அதனையே செய்வதற்குச் சித்தமுடையவர்கள். சுதந்திரமாக இயங்குவதற்கு உரித்தற்றவர்கள். அத்தகைய மனநிலையில் இருப்பதனால்தான் அதிகாரத்தினாலானவர்கள் பல வழிகளிலும் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்குரிய செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

காணிபிடிப்புச் செயற்பாடுகள் இதன் ஒரு அங்கமே. வடக்குப்பகுதிகளில் ஏற்கனவே தாம் அடாத்துச் செய்து வைத்திருக்கும் காணிகளுக்கான பிரச்சினைகள் இருக்கக் கூடியதாக மேலும் காணிகளைப் பிடிப்பதற்கான எத்தனங்கள் நிச்சயமாக தமிழ் மக்களை கோபங் கொள்ள்ச் செய்யும் காணி பிடிப்புக்கு எதிராக மக்கள் பல இடங்களிலும் இராணுவத்தினருக்கு எதிராக தமது எதிர்ப்பினைக் காட்டியே வருகின்றனர். இராணுவத்தினர் பல்வேறு உயிர் அச்சுறுத்தல்களை விடும்போதும் அதற்கும் அஞ்சாமல் மக்கள் எதிர்ப்புக் குரல்களை ஓங்கி ஒலிக்கவே செய்கின்றனர். ஆனாலும் இராணுவத்தரப் பும் அதனையும் மீறி தமது செயற்பாட்டினை முன்னெ டுப்பதற்கான முயற்சியையே மேற்கொள்ளும். அதற் காக அவர்கள் எந்த எல்லைவரைக்கும் போகவும் கூடும். ஆனால் இத்தகைய செயற்பாடு எத்தகைய மனிதவுரிமை மீறல் என்பதனை அரசும் இராணுவத்தினரும் கருத்தில் கொண்டு மக்களின் காணிகளையும் அவர்களின் உரிமைகளையும் அவர்களுக்கு வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் உரிமை மறுக்கப்படும் இனம் எப்போதும் அமைதியாக இருந்து விடுவதே இல்லை இது உலக இயங்கியல் வரலாற்றுக் காலங்கள் கற்றுத் தரும் விடயம் என்பதனை எல்லாத்தரப்புமே புரிந்து கொள்ள வேண்டும். ■

# "தமிழ் இந்தியப் பற்றற்ற மொழி"

## தமிழவனின் 'தமிழுணர்வின் வரைபடம்' எனும் நூல் பற்றிய சில சிந்தனைகள்

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லை fan இற்கு பதிலாகப் பயன்படுத்தலாம். மின் சூகை என்பது இயல்பாகவும் இசைவாகவும் உள்ளது. சூகை என்பது இதே பொருளில் தமிழில் வழங்கிய பழைய சொல் என்பது இவ்விடத்தில் கவனிக்கத்தக்கது. இவ்வாறு தமிழ் கூறும் நல்லுலகில் வட்டார வழக்குகளைப் பயன்படுத்துவதால் எழுத்து வழக்குக்கும் பேச்சு வழக்குக்கும் உள்ள இடைவெளியைக் குறைத்து தமிழை மக்களுக்கு இன்னும் நெருக்கமான மொழியாகக் கொண்டு வரலாம்.

தமிழவன் குறிப்பிட மறந்துபோன இன்னொரு மொழி மாற்றுச் சாதனை இஸ்ரேலியர்களால் நிகழ்த்தப்பட்டதாகும் வழக்கற்றுப்போன ஹீபுறு மொழியை அவர்கள் வழக்குக்குக் கொண்டுவந்தார்கள். உலகம் பூராவும் சிதறிக் கிடந்த இஸ்ரேலியர்கள் இஸ்ரேலில் குடியேறி வாழத் தொடங்கினார்கள். இஸ்ரேலிய ஆட்சியாளர்களின் அயராத முயற்சியால் வழக்கற்றுப் போன ஹீபுறு மொழியில் பேசவும் எழுதவும் முடிந்தோராக அவர்கள் மாற்றப்பட்டனர். இச்செயற்பாட்டைத் தமிழ் ஆர்வலர்கள் உலகின் பல்வேறு நாடுகளில் குடியேறி இன்று தமிழ்பேச முடியாமல் உள்ள தமிழர்கள் விடயத்திலும் பயன்படுத்தலாம்.

இவ்வாறு பயனுள்ள கருத்துக்களை முன்வைக்கும் இந்த நூலில் சில குறைபாடுகள் உள்ளன என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். முதலாவது விளக்கிச் சொல்ல வேண்டிய விடயங்களை விளக்காமல் தவளைப் பாய்ச்சலில் தாண்டித் தாண்டிச் செல்கிறார். மற்றது சில விடயங்களை அகவயமாக கூறிச் செல்கிறார். இன்னொரு குறை, தேவையான விடத்து உதாரணங்களைக் காட்டிச் செல்லாமையாகும். தமிழ்த் தேசியவாதமும் தமிழ் மூலப்படிம உணர்வும் ஒன்றுதானா? வேறுவேறா? என்ற வினாவிற்கு நூல் முடிந்த பிற்பாடும் விடை புலனாகவில்லை.

இவைகளால் குழப்பம் மேலிடுகிறது. இவைகளை அவரே ஒத்துக் கொள்கிறார் போலத் தெரிகிறது. தமிழ் நூல்களில் இரந்து மூலப்படிம உணர்வைத் திரட்டி அதனை ஒரு தத்துவமாகப் பலப்படுத்த வேண்டும் என்று அவர் கூறுவதிலிருந்து இது புலனாகிறது. இவ்வாறான திருத்தங்களைச் செய்து, இந்நூலை மறுபதிப்புச் செய்தால் தமிழர் வாழ்வை மறு நிர்மாணம் செய்யக்கூடிய வளமிக்க நூலாக இது திகழும். ■

(04 ஆம் பக்கத்தொடர்ச்சி)


இதேபோன்றுதான் நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய இன்னுமொரு தேசம் இஸ்ரேல். உலகெங்கும் சிதறிப்போய் நாதியற்றவர்களாக வாழ்ந்த யூதர்கள் தங்களது "வாக்களிக்கப்பட்ட பூமியை" மீளவும் கட்டியெழுப்பவதற்கு கொடுத்த விலையும் எடுத்த முயற்சிகளும் வியக்கத்தக்கவை. யூதர்களின் சியோனிசக் கோட்பாட்டின் பேரால் இஸ்ரேல் நாடு இன்று பாலஸ்தீனத்தை ஆக்கிரமிப்பதனையும் அதனை கூறுபோடுவதனையும் நாங்கள் எந்த நிலையிலும் அங்கீகரிக்கமாட்டோம். எனினும் யூதர்கள் தங்களை மிகவும் பலம்பொருந்திய தேசமாக இன்று நிலைநிறுத்திய வரலாற்றுப்பாடங்கள் எங்களுக்கு மிகவும் முக்கியமானவை.

19 ஆம் நூற்றண்டின் இறுதிக்காலத்தில் துருக்கியின் ஓட்டோமான் சாம்ராஜியத்தின் கீழ் பாலஸ்தீனத்தின் பாலைவனங்களில் 1880 ஆம் ஆண்டுகளிலேயே யூதர்கள் தங்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கான கட்டுமானத்தை ஆரம்பித்து விட்டார்கள். சியோனிசம் (Zionism) என்ற கோட்பாட்டின்கீழ் உலகில் சிதறி வாழ்ந்த அனைத்து யூதர்களையும் ஒருங்கிணைத்து ஹீபுறு மொழி ஊடாக ஒருங்கிணைத்த யூதர்கள் தங்களுக்கான தேசத்திற்கான நிலத்தை காசுகொடுத்து கையகப்படுத்தும் முயற்சிகளை ஆரம்பித்தனர். உலகின் பலதிக்குகளிலும் ஏதிலிகளாக வாழ்ந்த மக்களை தாங்கள் கொள்வனவு செய்த நிலங்களில் குடியமர்த்தி படிப்படியாக தங்கள் தேசத்திற்கான நிலத்தையும் மக்கள் தொகையினையும் பன்மடங்காக்கினர். பாலைவனத்தை பசுஞ்சோலையாக்குவதற்காக விவசாய முயற்சிகளை கூட்டுப்பண்ணைகளாக "கிபுட்ஸ்"

# சிந்தனையும் அணுகுமுறையும் மாற்றமடைய வேண்டும்.

## -உலக வரலாறு கற்றுத் தந்த பாடம்-

(Kibbutz) என்ற பெயரில் உருவாக்கினார்கள். 1948 இல் ஐ.நா.சாசனத்தின் கீழ் இஸ்ரேல் என்ற நாடும் பாலஸ்தீனம் என்ற நாடும் பிரகடனப்படுத் தபட்ட போது யூதர்களால் ஏற்கனவே காசு கொடுத்து வாங்கப்பட்ட நிலமும் குடியேற்றப்பட்ட மக்களும் பசுஞ்சோலைகளாக்கப்பட்ட விவசாயப் பண்ணைகளும் தயாராக இருந்தன.



1948 இல் தங்கள் நாட்டினைப் பிரகடனப்படுத்திய பின்பு இஸ்ரேலின் அரசாங்கம் தங்களை உலகின் முதன்மையான தேசங்களில் ஒன்றாக நிலைநிறுத்துவதற்கான மூலோபாயங்களை உருவாக்கியது. நாட்டினையும் பலப்படுத்துவதோடு வளப்படுத்துவதற்கு விவசாயப்பொருளாதாரத்திற்கு இருந்த வரையறைகளை உணர்ந்த அவர்கள் அதிஉயர் தொழில்நுட்பங்கள் கொண்ட கைத்தொழில் துறைகளை தங்களது முதன்மைத்தெரிவுகளாக கொண்டனர். விவசாய ஆராய்ச்சிக்காக நிறுவனம், தொழில்நுட்பமும் பயிற்சிக்குமான நிறுவனம், உயர்தொழில்நுட்பம் சார்ந்த கைத்தொழில்களுக்கான கூட்டாண்மை நிறுவனங்கள் எனப் பலபரிமாணங்களில் இஸ்ரேல் நாடு தன்னைத் தகவமைத்துக் கொண்டது. தனது மனிதவளத்தை தொழில்நுட்பமும் விஞ்ஞானமும் சார்ந்த உயர் ஆளுமைகொண்ட மூலவளமாகவும் உழைப்புச்சக்தியாகவும் வார்த்தெடுத்தது.

நாங்கள் இஸ்ரேல் யூதர்களிடமிருந்து நிறைய விடயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

தேசத்திற்கு அடிப்படையான நிலமும் மக்கள் பலமும் காப்பாற்றப்பட வேண்டும்.

காணிகளைக் காசுக்காக விற்பதனை நிறுத்தி தந்திரோபாய முக்கியத்துவம் வாய்ந்த நிலங்களைப் பணம்கொடுத்தாவது கொள்வனவு செய்து எங்கள் சமூகத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவேண்டும்.

எமது மக்களின் இறைமையும் சுதந்திரமும் உணவின் பேரால் பணயமாக்கப்படாத வகையில் எங்களுக்கான உணவு இறைமையினைக் கட்டியெழுப்பவேண்டும்.

எங்கள் பிரதேசத்தின் விவசாய வளமும் உணவு உற்பத்தியும் சிறப்பான முறையில் கையாளப்படுவதற்கு தேவையான மக்கள் சார் நிறுவனங்களைக் கட்டியெழுப்ப வேண்டும்.

விரைந்த அபிவிருத்தியையும் மிகைமதிப்பு ஊட்டப்பட்ட சந்தைப்பொருளாதாரத்தின் அனுகூலங்களைக் கையகப்படுத்துவதற்காக தந்திரோபாய அடிப்படையிலான கைத்தொழில்கள் அடையாளங்காணப்பட்டு தனியார் துறையினதும் சமூகத்தின் கூட்டு முதலீடுகளாகவும் உருவாக்கப்படவேண்டும்.

திட்டமிடப்படும் உயர்தொழில்நுட்பம் சார்ந்த கைத்தொழில்களைக் கையாளக்கூடிய ஆற்றலும் அறிவும் தொழில்நுட்பத் திறனும் கொண்ட மனிதவளத்தையும் அவற்றை முன்னெடுத்துச்செல்லக்கூடிய நிறுவனங்களையும் விரைந்து உருவாக்க வேண்டும்.

எங்கள் குழந்தைகளின் கல்வியும் வாழ்க்கை வழிகாட்டல்களும் மரபார்ந்த முறைகளுக்கு புறம்பானதாக அவர்களின் உன்னதமான பிறப்பாற்றல்களை விரிவுபடுத்துவதாகவும் தேசத்தின் கட்டுமானத்திற்கு வேண்டிய புத்தாக்கங்களை கண்டறியும் ஆர்வத்தை தூண்டக்கூடியதாகவும் வடிவமைக்கப்படவேண்டும்.

இஸ்ரேல், அயர்லாந்து, தென்கொரிய ஆசிய நாடுகளின் வெற்றிக்கதைகளில் பிராந்திய மயப்படுத்தப்பட்ட கைத்தொழில்களின் வளர்ச்சி மிக முக்கிய பங்காற்றியுள்ளது. எனவே எங்களது பிரதேசங்களின் தொலைதூர பிரதேசங்கள், கிராமங்கள் ஆகியவற்றில் மக்களைப் பரவலாக தக்கவைத்து குடிப்பரம்பலை வலுப்படுத்துவதற்காகப் புத்தாக்கங்கள் கொண்ட புதிய கைத்தொழில் முயற்சிகள் பரவலாக விரிவுபடுத்தப்படவேண்டும்.

சுருக்கமாக கூறுவதானால் " எங்கள் சிந்தனையும் அணுகுமுறைகளும் நிறுவன ஆற்றல்களும் முழுமையான மாற்றத்திற்குள் கொண்டுவரப்படவேண்டும். வாழ்வாதாரம், வறுமை ஒழிப்பு, நலிந்தோர் நலவாழ்வு, என்ற நிலைகளையும் கடந்ததாகச் செயற்படும் போது இக்குறிக்கோள்களும் இயல்பாகவே அடையப்பட்டுவிடும்.

"இனியொரு புது விதிசெய்வோம்: அதை எந்நாளும் காப்போம்"

■



# தமிழர் தரப்பிடம் ஒற்றுமையும் இல்லை ஒருங்கிணைவும் இல்லை.

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை மட்டுமல்ல ஒருங்கிணைவும் இல்லை. முன்னர் இரண்டு சந்தர்ப்பங்களில் ஒருங்கிணைவு நிகழ்ந்திருக்கிறது. 1970 களில் தமிழர் விடுதலைக் கூட்டணி அப்படித்தான் உருவாகியது. அதற்கொரு புதிய சின்னமாக உதய சூரியனும் கிடைத்தது.

பின்னர் இயக்கங்கள் நான்கு (புலிகள், ஈ.பி.ஆர். எல்.எவ், ஈரோஸ், ரெலோ) இணைந்து (கைகோர்த்து) ஒரு புதிய கூட்டு ஈழதேசிய விடுதலை முன்னணி என்று உருவாகியது. ஆனால் அது மூன்று ஆண்டுகள் கூட நீடிக்கவில்லை. அது இயக்கங்களின் கூட்டு என்பதால் அதற்குப் பதிவும் சாத்தியமில்லை, சின்னமும் சாத்தியமில்லை.

ஆனால் 2021 இல் புலிகள் தலைமையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாகியது. இப்பொழுது 20 ஆண்டுகள் கடந்து விட்டன. பதிவும் நடக்கவில்லை. ஒற்றுமையும் குலைந்து விட்டது.

இதற்கு அடிப்படைக்காரணம் ஜனநாயகமின்மையே. மற்றது நம்பிக்கையீனம். புதிய கட்சியாகக் கூட்டமைப்பு, பதிவு பெறுமாக இருந்தால் அது பயன்படுத்தும் வீட்டுச் சின்னம் இல்லாது போய் விடும். அந்தச் சின்னம் தமிழரசுக் கட்சிக்குரியது. தமிழரசுக் கட்சியின் சின்னம் என்பதால்தான் அது கூட்டமைப்பில் பிற தரப்புகளின் மீது அதிகாரத்தையும் அவமரியாதையையும் செலுத்துகிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது அதில் தமிழரசுக் கட்சியோ வீட்டுச் சின்னமோ இருக்கவில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணியின் சார்பாகவே ஒரு தரப்பினர் கலந்து கொண்டனர். சம்மந்தன், மாவை சேனாதிராஜா உட்பட. ஆனால் ஆனந்த சங்கரியின் அவசரப்புத்தியே சம்மந்தனையும் தமிழரசுக் கட்சியையும் பலப்படுத்தியது. அதொரு பக்கம் இருக்கட்டும். ஆனால் இடையில் நுழைந்த தமிழரசுக் கட்சி இன்று ஆதிக்கத்தரப்பாக மாறி விட்டது.

1975 க்குப் பிறகு 2005 வரையில் கல்லறைக்குள்ளிருந்த தமிழரசுக் கட்சியை உயிரூட்டி வைத்திருக்கிறார்கள். இதைச் செல்வநாயகமே கைவிட்டிருந்தார் என்பது இன்னும் சுவாரசியமானது. "தமிழ் மக்களை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேணும்" என்பது தமிழரசுக் கட்சியினால் முடியாது என்றுதானே அர்த்தமாகும். அதனால்தானே பின்னர் தமிழர் விடுதலைக்கூட்டணி உருவாகியது.

ஆகவே ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. தமிழரசுக் கட்சி ஒரு போதுமே நேர்மையான அரசியற் கூட்டுக்கோ ஒருங்கிணைவுக்கோ நேர்மையான அரசியலுக்கோ வரப்போவதில்லை என்று.

இதற்கு வலுவான சான்றுண்டு. 2001 இல் உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் புலிகள் தமக்கு எதிர் நிலையில் நின்ற ரெலோ, ஈ.பி.ஆர்.எல். எவ் போன்ற தரப்புகளைக் கூட இணைத்தனர். ஆனால் 2009 க்குப் பின் தமிழரசுக் கட்சியோ தன்னுடன் இருந்த தரப்புகளையும் விரட்டி இன்று தமிழ்த்தேசிய அரசியல் பல கூறுகளாகச் சிதறுண்டு கிடக்கிறது.

தமிழரசுக் கட்சியின் பிடிவாதப் போக்கினால் ஐங்கரநேசனின் தமிழ்த்தேசிய பசுமை இயக்கம், அனந்தியின் ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம், சிவாஜிலிங்கம் - சிறிகாந்தாவின் தமிழ்த்தேசியக் கட்சி, விக்கினேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணி போன்றவை புதிதாக உருவாகியவை. இதை விட ஏற்கெனவே அதற்குள்ளிருந்த தமிழ்க்காங்கிரசும் ஈ.பி.ஆர். எல்.எவ்வும் வெளியேறித் தனியாக நிற்கின்றன.

இங்கே இரண்டு விடயங்களை நாம் அவதானிக்கலாம். மனோகணேசன் சம்மந்தன், மாவை சேனாதிராஜா போன்றோரை விட அரசியலில் வாழ்க்கையில் ஜூனியர். ஆனால் அரசியலில் சீனியர்.

எப்படியென்றால் நான் முன்பே பல தடவை குறிப்பிட்டதைப்போல மலையக நண்பர் ஒருவர் சொன்னதை இப்பொழுதும் குறிப்பிடலாம். "நாங்க, லயங்களில் வாழும் வாழ்க்கையிலிருந்து மெல்ல மெல்ல விடுபட்டுக் கொண்டிருக்கிறோம். நீங்க அதுக்கும் மேலான வாழ்க்கையில இருந்த கீழ (பணிய) வந்து கொண்டிருக்கிறீங்க"

இந்த உண்மை யாரைச் சுடும்?

■



# அடுப்படி


தி.செல்வமனோகரன்


"அம்மா.. அம்மா..."
ஓம் தம்பி... என்ன?
'இஞ்சயொருக்கா வாங்கோ'
"பொறு கொஞ்சம். அடுப்படியில வேலையா இருக்கிறன்"

அடுப்படி என்ற சொல் தொண்ணூறுகள் வரை யாழ்ப்பாணத்தில் சாதாரணமாக இருந்தது. இதற்குச் சமாந்தரமாக காலனித்துவக் காலத்தில் தமிழுக்கு வந்த குசினி (போர்த்துக்கேய சொல்) என்ற சொல்லும் வழக்கில் இன்று வரை இருக்கிறது. அந்த வகையில் அடுப்படி, குசினி, கிச்சின், அடுக்களை என்பன சமயலறையைக் குறிக்கும் ஒத்த வழக்காறுகள். அடுக்களை என்ற சொல்லே அடுப்படி என மருவியிருக்க வேண்டும் என்பாரும் உளர். இலங்கை வாழ் முஸ்லிம்களிடமும் அடுப்படி என்னும் சொல் வழக்கில் இருப்பதை அறிய முடிகிறது.

போர்த்துக்கீச மொழியின் 'Cozinha' (குசினா) என்னும் சொல்லே தமிழில் குசினி என்றும் சிங்களத்தில் "குஸ்ஸிய" என்றும் வழங்கப்படுகின்றது. குசினி என்னும் சொல் தற்காலத்தில் தமிழர் வாழும் தேசம் எங்கும் வழக்கில் இருந்து வருகின்றது. அது போல நவநாகரிக வாழ்வின் வழி உருவான சமையலறையும் தமிழ் மனமும் கிச்சின் (Kitchen) எனும் சொல்லுக்கு மாறி வருகிறது.

சாதாரண மக்களின் வீட்டமைப்பு முறையில் மண் குடிசைகளே இருந்து வந்துள்ளன. தாயறை அதனோடு ஒட்டிய திறந்த விறாந்தை அல்லது திண்ணை எனும் அமைப்பே வீடாகக் காணப்பட்டது. இருவறை, மூவறை வீடுகள் வந்த போதும் கூட வீட்டிலிருந்து




விலக்கி - வீட்டின் வலது புறத்தில் தனியேதான் அடுப்படி அமைக்கப்பட்டிருந்தது.

அடுப்பு வைக்கும் இடம் 'அடுப்படி' எனப்பட்டது. ஆரம்ப காலத்தில் வெறும் கற்களைக் வைத்தே அடுப்புக்கள் அமைக்கப்பட்டன. மழைகாலம் பறவை விலங்குகளிடம் இருந்து பாதுகாத்தல், தூய்மை பேணல் போன்றவைக்காகக் கூரையின் கீழ் சமைத்தல் எனும் பழக்கம் ஏற்பட்டது. அங்கும் கற்களைக் கொண்டு அடுப்பு அமைத்து சமைத்தல் நிகழ்ந்தாலும் காலப்போக்கில் மண்ணால் அடுப்படியை உருவாக்குதல் நிகழ்ந்தது. மண்ணும் சிறு கற்களும் கொண்டும் பின்பு இரும்புக்கம்பிகளை வைத்தும் அவையுருவாக்கப் பட்டன. காலப்போக்கில் மண்ணாலான அடுப்புக்களை சந்தைகளில் வாங்கி, அவற்றை நடுவே வைத்து சுற்றி வர மண்ணால் மேடையமைக்கப்பட்டது. அதுவே அடுப்படி ஆயிற்று. பின்பு அடுப்படி எனும் சொல் சமையலறையைக் குறிப்பதாயிற்று.

இரும்புக்கம்பியிலான அடுப்பை வைத்துக் கட்டும் மரபும் பின்னர் ஏற்பட்டது. இந்த அடுப்புக் கட்டலுக்கு மணல் அல்லாத எல்லாவகை மண்களும் பயன்படுத்தப்பட்டு வந்தாலும் 'புத்துமண்ணே' சிறந்த மண்ணாகக் கருதப்பட்டது. கறையான்கள் புற்று எடுத்து மேலே கட்டிய மண்ணையே 'புத்துமண்' என்பர். அதனை எடுத்துப் பதமாகக் குளைத்து சிறு கற்களும் சேர்த்து கட்டப்படும். முக்கால் வட்டமாக பெரும்பாலும் மூன்று அடுப்புக்கள் அமைக்கப்படும். நீண்ட செவ்வக அமைப்பில் ஏறத்தாழ ஒருமுழம் (ஒன்றரையடி) இடைவெளியில் அடுப்புக்கள் அமைக்கப்படும். கட்டப்பட்ட அடுப்படி காய்ந்த பின் சாணகத்தால் மெழுகப்படும். அதேபோல அவ்வறை மண்ணால் அரைக்குந்து கொண்டதாகவும் அதற்குமேல் பனை அல்லது வடலி மட்டை கொண்டு சிறுசிறு இடைவெளி கொண்ட வகையில் அடைக்கப்படும். கருக்கை உடைய இம்மட்டைகளைக் கட்ட பனம் ஈர்க்கும் பின் கயிறு, ரயர் வயர், ஆணி போன்றனவும் பயன்படுத்தப்பட்டன. சமையலின் போது ஏற்படும் புகை வெளியேறவே சிறு இடைவெளி விட்டு கருக்கு மட்டைகள் கட்டப்பட்டன. நிலம் பசுஞ்சாணத்தால் மெழுகப்படும்.

சாணகம் சிறந்த தொற்று நீக்கி என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. வாரம் ஒருமுறையேனும் அடுப்பும் நிலமும், மாதம் ஒருமுறையேனும் சுவரும் மெழுகப்படுவது வழக்கமாக இருந்துள்ளது. நிற அழகியலுக்காக 'பற்றிக் கரி' யை சாணகத்தோடு கலந்து மெழுகும் பழக்கமும் இருந்துள்ளது. அடுப்பு, நிலத்தோடுதான் இருந்துள்ளது. பலகைகட்டையில் அல்லது தேங்காய் துருவும் திருகுவேலையில் (திருவேல) அல்லது அரிவாள் மனையில் இருந்து கொண்டே சமையல் வேலை இடம்பெறும். சமயலறையை அம்மம்மா, அம்மா, அக்கா போன்றவர்களே ஆக்கிரமித்தது இருந்தனர். பெண்கள் அதுபெண்களின் வேலையாகவும் தமக்கே உரிய - உரிமை இடமாகவும் இந்நூற்றாண்டின் தொடக்கம் வரை கருதி வந்துள்ளனர்.


அடுப்படியின் கரையில் விறகுகள் இருக்கும். அவை அடுப்புக்குள் செருகப்பட்டு ஊதாங்குழலால் ஊதி நெருப்பை எரிப்பர். அதிலிருந்தபடியே தேங்காய் துருவுதல், மரக்கறி வெட்டுதல் முதலிய செயற்பாடுகள் நடைபெறும். நீர்ப்பாவனை அல்லது நீர்ப்பாத்திரம் குசினிக்கு வெளியே இருக்கும். பெரும்பாலும் மட்சம், மாமிசம் முதலியவற்றின் மணம் கருதியோ அன்றி வேறேதும் காரணம் கருதியோ அவை வெளியில் வைத்தே வெட்டி சுத்தமாக்கப்பட்ட பின்பே அடுப்படிக்குக் கொண்டு வரப்பட்டன. அடுப்படியில் வேலை முடிந்த பின் அடுப்பினைச் சுற்றி வரப் பச்சையான அல்லது ஈரத்தன்மையுள்ள விறகுகள் காய்வதற்காக அடுப்பு மேடையில் அடுக்கப்படும். சிலவேளைகளில் அவை அப்படியே எரிந்து விடுவதுமுண்டு.

எப்போதும் அடுப்படி தூய்மையானதாகவே பேணப்பட்டு வந்துள்ளது. பூச்சி, புழுக்கள் வந்து விடாதவாறு பேணப்பட்டது. மஞ்சள் தெளிக்கப் பட்டது. சமையலுக்கான உள்ளி, மிளகு, சீரகம், வெந்தயம், வேர்க்கம்பூ, மஞ்சள், உப்பு போன்றவை மூடியுள்ள சிறு பாத்திரங்களில் சேமிக்கப்படும். அரிசி முதலானவை தாயறையில் பேணப்பட்டன. சமையலறை தூய்மையாய் சீர்மை மிக்கதாகவே பேணப்பட்டது.

அடுப்படி வீட்டின் வலது பக்கத்திலும் நாற்சார் வீடு சார்ந்தவற்றில் பின்பக்கத்திலும் வீட்டில் இருந்து சற்றுத் தூரவே (விலத்தியே) அமைக்கப்பட்டன. தற்செயலாக அடுப்படியில் தீப்பரவல் நிகழ்ந்தால் அது வீட்டையும் தாக்கி விடாது இருக்கவும் சமைக்கும் போது புகை வீட்டினுள் வராது இருக்கவும் இவ்வாறு அமைத்திருக்கலாம். பொருட்களை குசினியில் களஞ்சியப்படுத்தாது விட்டமைக்கும் இதுவே காராணமாக இருக்கலாம். ஏனெனில் கூரைகள் காய்ந்த ஓலைகளாலேயே அமைக்கப்பட்டிருந்தன.

பின்பு வாஸ்து முறையிலான கல்வீடுகள் உருவான காலத்தில் சுவாமிப்பட அறைக்கு அடுப்பில் எரியும் தீ தெரியும் வகையில் கட்டமைக்கப்பட்டது. சற்றுத் தள்ளி மூலையில் நீர்நிலை (கிணறு) அமைக்கும் வழக்கமும் இருக்கிறது. இதுவும் பாதுகாப்புக் கருதியதாக இருக்கலாம் வீடுகளில் பிள்ளைப்பேறு நடைபெற்ற காலப்பகுதிகளில் குசினியிலேயே பெரும்பாலும் பிரசவம் பார்க்கும் வழக்கம் முன்பு இருந்ததாக அறியமுடிகிறது. தாயறை தீட்டுநீக்கம் செய்யப்பட்ட தூய்மைமிக்க இடம் என்பதனாலும் வேறு இடம் இல்லை என்பதனாலும் இது நடைபெற்றிருக்க கூடும். அத்தோடு பிரசவ காலத்தில் தேவைப்படும் சுடுநீர் மற்றும் தாய்க்கு ஏற்படக்கூடிய ஏதாவது சிக்கலுக்கு உதவும் வேர்க்கம்பூ (சுக்கு) மிளகு, மஞ்சள் முதலியவற்றை உடனடியாகப் பெற்று கைவைத்தியம் பார்ப்பதற்கு உதவும் இடமாகவும் கருதியிருக்கலாம். அக்காலப்பெண்கள் அடுப்படியே கதி எனக் கிடப்பதனால் (இருப்பதனால்), பெரும்பாலும் சமையலிலேயே கழிப்பதனால் பிரசவ நேரத்திலும் அங்கேயே இருப்பதனாலும் பிரசவங்கள் அடுப்படியில் நிகழ்ந்திருக்கலாம்.

வீட்டில் ஏற்படும் அவலங்களுக்கு கண்ணூறே காரணம் எனக்கருதி உப்பு, மிளகாய் கொண்டு




வீட்டினுள்ளவர்களுக்கு சுற்றி, வாய் பேசாமல் அடுப்பில் இட்டு எரிப்பதனூடாக கண்ணூறு நீங்கும் என்ற நம்பிக்கைக்கும் அடுப்படி இடம்கொடுக்கின்றது.

வசதிகள் பெருகிய காலத்தில் கல்வீடுகள் வந்த பின் 'தூயசைவம்' பேணும் சில பிரதேசங்களில் வீட்டுடன் இணைக்கப்பட்ட உள்ளக சமயலறை இருக்கும். அதே பட்சத்தில் தனியே, வீட்டுக்கு வெளியே சமயலறை அமைத்து மட்சம், மாமிசம் சமைக்கும் பழக்கம் இருந்து வருகிறது. யாழ்ப்பணம் தென்மராட்சி பிரதேசத்தில் இதனைப் பெருவழக்காகக் காணலாம். மட்சப்பாத்திரங்களை வீட்டுக்குள் கொண்டு போவதில்லை. வாஸ்து சாஸ்திரப்படி அடுப்பின் நெருப்பு சாமியறைக்குத் தெரிய, வீட்டினை அமைப்பதனால் மட்ச, மாமிச சமையல் சாமியறைக்குத் தெரியும். அது தவறு என்பதனாலும் அவற்றின் மணம் வீடு முழுவதும் பரவும் என்பதனாலும் அவற்றைச் சமைப்பதால் இலையான் (ஈ) முதலானவை வீட்டில் அதிகம் வரும் என்பதனாலும் இவ்வமைப்பு முறை பின்பற்றப்பட்டிருக்கலாம். அவர்கள் இதனை சமய, சுகாதார அடிப்படையாகவே கருதுகிறார்கள்.

அடுப்படியில் குந்தியிருந்தும், பலகைகளில் இருந்தும் சப்பாணம் கட்டியிருந்தும் அம்மியிலும் ஆட்டுக்கல்லிலும் அரைத்து மூன்று வேளையும் சமைத்த அம்மா, அம்மாக்கள் தொண்ணூறு வயது வரை நோய் நொடியின்றி வாழ்ந்தனர். குறித்த குடும்பத்தின் வறுமையை 'அடுப்படியில் பூனை படுத்துவிட்டது.' எனும் தொடரால் உரைப்பர். தமிழில் இதனை அடிப்படையாகக் கொண்ட தனிப்பாடலும் உண்டு. இன்று நம் வீடுகளின் அடுப்படியில் பூனைகள் என்றும் படுப்பதில்லை. குக்கர்களில் எங்கே படுப்பது, குக்கர்கள் சுத்தபத்தமாக இருக்கின்றன. நமது கால்களோ சாப்பாட்டுக் கடைகளிலும், பீட்சாக்கடைகளிலும் ஆரோக்கியம் சிறுக்க உடலோ பருக்கிறது நம் நாட்டுப் பொருளாதாரத்தைப் போல. ■





# வாண்டுமாமா

சிறுவர் பகுதி

# நிலாவில் உலாப் போகும் வாகனம்



அமெரிக்க விண்வெளி அமைப்பான 'நாசா', நிலாவுக்கு மனிதனை அனுப்பும் திட்டத்தை முடுக்கிவிட்டிருக்கிறது. 'ஆர் டெமிஸ்' என்ற அந்தத் திட்டத்தின்படி, விண் வெளி வீரர்கள், நிலாவில் ஆய்வு மேற்கொள்ள, 'எல்.டி.வி.,' எனப்படும் நிலாத் தரை வாகனத்தைத் தயாரிக்கும் பொறுப்பை நார்த்ராப் க்ரும்மன் எனும் நிறுவனத்திடம் கொடுத்துள்ளது.

அண்மையில், நார்த்ராப் க்ரும்மன், அதற்கான பணிகளைத் துவங்கியது. எல்.டி.வி.,க்கான சக்கரங்களை மிச்செலினிடமிருந்தும், பிற பாகங்களை லூனார் அவுட்போஸ்ட், இன்டியூடிவ் மெசின்ஸ் மற்றும் ஏ.வி.எல்., போன்ற தொழில்நுட்ப நிறுவனங்களிடம் வாங்க நார்த்ராப் ஒப்பந்தம் செய்துள்ளது.நாசாவின் விண்வெளி வீரர், கடைசியாக 1972 இல் நிலாவுக்கு சென்று வந்தனர். அப்போதைய நிலா விஜயத்தின்போது, லூனார் ரோவர் என்ற மின் வாகனத்தை எடுத்துச் சென்றதால், நிலா மண் மீது அவர்களால் 7.6 கி.மீ தொலைவு வரை சென்று சோதனைகள் செய்து, விண்கலத்திற்குத் திரும்ப முடிந்தது.

இந்த முறை, எல்.டி.வி., வாகனம் கூடுதல் தொழில்நுட்ப வசதிகளையும், ரோபோ மற்றும் சரக்குகளைக் கையாளும் திறனும், அதிக தொலைவு செல்ல உதவும் மின் கலன்களையும் கொண்டிருக்கும் என நார்த்ராப் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த வாகனம் அடுத்த நிலாப் பயணத்தில் முக்கிய பங்கு ஆற்றும் என்பது மட்டும் உறுதி.

# அன்புள்ள நண்பர்கள் காடு



ஒரு வனத்தில் இரு அழகிய முயல் நண்பர்கள் வாழ்ந்து வந்தார்கள். இருவரும் எப்பொழுதும் ஒன்றாகவே இருப்பார்கள். இதைப் பார்க்கும் மற்ற விலங்குகளுக்கு மிகவும் பொறாமையாக இருக்கும். இதனால் இரு முயல்களையும் பிரிக்கத் திட்டம் தீட்டினார்கள். ஒரு முயலிடம் போய் சொன்னார்கள். "உன் நண்பன் உன்னை விட்டு விட்டு வேறு ஒரு முயலுடன் உணவு உண்கிறான் என்று" மற்ற முயலிடம் போய் சொன்னார்கள். "உன் நண்பன் உன்னை விட்டு விட்டு வேறு ஒரு முயலுடன் விளையாடுகிறான் என்று" இருவரும் ஒன்றை ஒன்று புரிந்து கொண்டு வாழ்கின்றதால் அவர்கள் சொன்னதை நம்பவில்லை. இதனால் அங்கு வாழ்ந்த விலங்குகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து பல திட்டங் களை மேற்கொண்டன. ஆனாலும் இரு முயல்களுக்கிடையிலும் எந்த ஒரு பிரிவினைகளும் உருவாகாமல் இன்னும் இன்னும் ஒற்றுமையாக நம்பிக்கையுடன் வாழ்ந்து வந்தார்கள். இதைப் பார்த்த மற்றைய விலங்குகள் அவர்களை முன் உதாரணமாக வைத்து தங்களுடைய நண்பர்களுடன் ஒற்றுமையாகவும் நம்பிக்கையுடனும் வாழ்ந்து வந்தார்கள். இதனால் அவர்கள் வாழ்ந்து வந்த காடு அன்புள்ள நண்பர்கள் காடு என்று அழைக்கப்பட்டது. பல பல வருடங்களாக அங்கு வாழ்கின்ற அனைத்து விலங்குகளுமே நட்புடன் வாழ்ந்து வந்தன.

**சபின்**



# மறக்க முடியாத உறவு நண்பர்கள்

ஒரே பள்ளியில் ஒன்றாகக் கற்றோம்

விளையாட்டில் சண்டை பிடித்தோம்

பிரியும்போது ஒன்றாக அழுதோம்

சேரும்போது ஒன்றாக சிரித்தோம்

இதுவே நண்பர்களின் பிரிக்க முடியாத உறவு

**அ.கேதுஷா**
*தரம் - 05*
*யா/கரணவாய் வேதாரணி*
*யேஸ்வர வித்தியாலயம்*

# விடுகதைகள்

1. அந்திவரும் நேரம், அவளும் வரும் நேரும் அது என்ன?
   **நிலா**
2. பூமியிலே பிறக்கும், புகையாய்ப் போகும். அது என்ன?
   **பெட்ரோல்**
3. இரவும் பகலும் ஓய்வு இல்லை, படுத்தால் எழுப்ப ஆள் இல்லை அது என்ன?
   **இதயம்**
5. பிறந்தது முதல் வயிற்றாலே போகிறது. அது என்ன?
   **பாம்பு**
6. ஒளி கொடுக்கும், விளக்கு அல்ல சூடு கொடுக்கும், தீ அல்ல பளபளக்கும், தங்கம் அல்ல. அது என்ன?
   **சூரியன்**
7. பொட்டுப்போல் இலை இருக்கும், பொரி போல் பூப் பூக்கும், தின்னக்காய் காய்க்கும், தின்னாப் பழம் பழுக்கும் அது என்ன?
   **முருங்கைமரம்**
8. என்னைப் பார்க்க முடியும், ஆனால் எனக்கு எடை கிடையாது. என்னை ஒரு பாத்திரத்தில் போட்டால் அதன் அளவை குறைத்திடுவேன். நான் யார் ?
   **துவாரம்**



# பூச்சி மருந்து அடிக்கும் தேனிக்கள்


பூச்சி மருந்துகளின் நச்சுத் தன்மைக்கு தேனீக்கள் பலியாவது அதிகரித்து வரும் காலம் இது. ஆனால், தேனீக்களைக் கொண்டே இயற்கைப் பூச்சி மருந்துகளை பயிர்களின் மேல் தெளிக்க முடியும் என்பதை கனடாவிலுள்ள, 'பீ வெக்டார் டெக்னாலஜி'யின் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

பயிர்களுக்கு நடுவே தேன் சேகரிக்கவும், மகரந்தச் சேர்க்கைக்காகவும் வைக்கப்படும் தேனீப் பெட்டிகளை தந்திரமாக விஞ்ஞானிகள் பயன்படுத்துகின்றனர். தேனீக்கள் வந்து செல்வதற்காக பெட்டியில் இருக்கும் துளையில் இயற்கை பூஞ்சைக் கொல்லி மருந்தை வைத்து விட்டால், அதை தேனீக்கள் உடலில் பூசிய படி பறந்து செல்லும். அவை தேன் பருக பயிர்களின் பூக்களின் மேல் அமர்கையில், இயற்கை பூஞ்சைக் கொல்லித் துகள்கள் உதிர்ந்து பூசிக்கொள்ளும். இதனால் பயிரின் பூக்களில் பூஞ்சை உருவாகாமல் தடுக்கப்படும்.

இதே முறையில் தேனீக்களுக்கு கெடுதல் தராத, வேறு வகை இயற்கைப் பூச்சி மருந்து பொடிகளையும் கலந்து தேன் கூட்டு வாயிலில் வைக்க முடியும். பூச்சி மருந்துகளை பொதுவாக பயிர்கள், செடி கொடிகளின் எல்லாப் பகுதியின் மீதும் தெளிப்பது தான் நடைமுறை. இதனால் தாவரம் முழுதும் நச்சுத் தன்மை படுவதோடு, விவசாயிகளுக்கு இடு பொருள் செலவும் விரயமாகிறது. ஆனால், தேனீக்கள் பூக்கள் மீது மட்டுமே அமரக்கூடியவை.

இதனால், விளைச்சலுக்கு எது தேவையோ அதன் மீது மட்டும் பூச்சி மற்றும் பூஞ்சைக் கொல்லிகளை தேனீக்களால் செலுத்த முடியும். தற்போது சோதனையில் இருக்கும் தேனீ மருந்து தெளிப்பு தொழில்நுட்பம் விரைவில் பரவும் என்று நம்பலாம்.





**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**

**தீம்புனல்**
**கனகசபை கட்டடத் தொகுதி**
**பருத்தித்துறை வீதி, நெல்லியடி.**
தொ.பே.: 021 226 2564

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 04.12.2021 அன்று வெளியிடப்பட்டது.